# இ.மு.க. I.M.K.




# தெய்வீக மருத்துவம்

## அல்லது ஆவிகளும் மனிதர்களும்

அந்தணர் அண்ணல்

**ஞானாச்சாரியார்**

அருளியது

# தெய்வீக மருத்துவம்

## அல்லது

# ஆவிகளும், மனிதர்களும்

இந்து வேதநாயகம், இந்து வேதபீடம்
இந்துமதத் தந்தை, அந்தணர் அண்ணல்
**ஞானச்சாரியார்.**

வெளியிடுவோர்:
**இந்து இலக்கியக் கழகம்**
பதினெண்சித்தர் மடம் அறக்கட்டளை,
G. N. T. சாலை, காரனோடை,
**சென்னை - 600 067**

*வெளியீடு: 211*
*முதற்பதிப்பு: 1969*
*இரண்டாம்பதிப்பு: 1992*
*உரிமை முழுதும் ஆசிரியருக்கே*

Dedicated to Universal Peace, Pleasure, Prosperity, Love and Service

An International Publication Devototed To The Religion of Universal Humanity and Divinity.

## பொருளடக்கம்

1] இரண்டாம் பதிப்பின் முன்னுரை
2] முதல்பதிப்பின் பதிப்புரை
3] முதல்பதிப்பின் முன்னுரை
4] அணிந்துரை
5] பரிந்துரை
6] அறிமுகவுரை
7] ஆசிரியர் கருத்து
8] தமிழும் தெய்வீக மருத்துவமும்
9] தமிழர்களும் தெய்வீக மருத்துவமும்
10] தமிழ்நாடும் தெய்வீக மருத்துவமும்
11] உலக மத ஆய்வுக் குழு
12] ஓராண்டு பணியால்
13] தெய்வீக மருத்துவமும் கடவுட் கலைகளும்
14] உலகமத ஆய்வுக் குழுவும் தமிழர்களும் கலைகளும்
15] தெய்வீக மருத்துவமும்
16] Siddhar
17] The World Religious Research Society

★ பக்கம் 44க்கு அடுத்து 29, 30, 31, 32 என்று தவறாக அச்சாகியுள்ள பக்க எண்களை, முறையே 45, 46, 47, என்று திருத்தி வாசிக்கவும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 7 | Devo tored | Devoted |
| | 24 | உலகமத அய்வுக் குழு தமிழர்களும் கலை | உலகமதஆய்வுக்குழுவும் தமிழர்களின் கலைகளும் |
| | 25 | தெய்வீகமருத் துவமும் | தெய்வீக மருத்துவமும் ஆவி உலகும் |
| | 28 | | 18. Message from Heaven |
| 3 | 17 | MN Roy | M. N. Roy |
| | 18 | இந்தியாவில். | இந்தியாவில் |
| | 20 | world | World |
| | 26 | சாதித்தும்பணியாற்றி | சாதித்தும், பணியாற்றி |
| 4 | 8 | Mysticel | Mystical |
| | 16 | பஙகு | பங்கு |
| | 20 | ஏற்றலோ. | ஏற்றலோ, |
| 5 | 4 | காலம்காலமாகக் | காலம்காலமாக |
| | 11 | தடுக்கப்படும், | தடுக்கப்படும்; |

| | | | |
|---|---|---|---|
| 6 | 8 | சிவன்போச்சு | சிவன் போக்கு |
| | 10 | செயல்திட்டமும் | செயல்திட்பமும், |
| 7 | 7 | சக்திகளைப் | சக்திகளை |
| | 8 | தெய்வீகசக்தி | தெய்வீகசத்தி |
| 8 | 11 | நுற்றுக்கணக்கில் | நூற்றுக்கணக்கில் |
| | 12 | Cossettes | Cassettes |
| | 17 | என்ற் | என்ற |
| 13 | 5 | த பொன்னுசாமி | த. பொன்னுசாமி |
| 31 | 13 | உருத்திராகக | உருத்திராக்க |
| 32 | 23 | அருகட்கலைகள் | அருட்கலைகள் |
| 36 | 16 | ( ) | (5) |
| 37 | 6 | அருட்சத்திகளை | அருட்சத்திகளைத் |
| 42 | 10 | (Iv) | (iv) |
| 43 | 9 | சேர்ந்திருககின்றது | சேர்ந்திருக்கின்றது; |
| 52 | 24 | தடுத்தற்கறி | தடுத்தகற்றி |
| 61 | 1 | Theiogy | Theology |
| | 22 | Phyrical | Physical |
| 66 | 15 | இநது | இந்து |
| 74 | 7 | இக் கருமாதியில் | இக்கருமாதியில் |
| | 9 | நிகந்தபடுகிறது | நிகழ்த்தப்படுகிறது. |
| | 10 | கிததர்களால் | சித்தர்களால் |
| | 23 | DIsease | Disease |
| 88 | 2 | Research | Research |

# முதல் பதிப்பின் பதிப்புரை

மனித இனம், வண்ணத்தால், வடிவத்தால், மொழியால், இனத்தால், நாட்டால், வாழ்வால் பல்வேறு பிரிவுகளாகச் சிதறுண்டு கிடக்கின்றது. அதனால், மனித இனம், வரலாற்றுக்கு முன் தொட்டே (From Pre-historic Period) போரும் பூசலும், பகையும், போட்டியும், பொருமையும்.... நிறைந்த ஒன்றாயிற்று. இந்நிலையில் மாற்றம் விளைவிக்க முயன்றோர் எண்ணற்றோர். அவர்களின் பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டே செல்வதைத் தவிர வேறு நிலையான பயன் விளைய வில்லை.

இத்துறையில் இந்த இருபதாம் நூற்றாண்டின் சிறந்த விஞ்ஞானி என்று கருதப்படும் டாக்டர் ஐன்சுடீனும் (Dr. Albert Einstein 1899-1955) அரசியல் உலகில் சிறந்த மேதையெனப் புகழ்பெற்ற எம். என். ராயும் (M N. Roy 1887-1954) துவக்கிய பணி இந்தியாவில். 1929இல் ‘உலக மத ஆய்வுக் குழுவின்’ தலைமைச் செயலகம் (Head office of the world Religious Research Society) அமைத்ததோடு முழுவடிவம் பெற்றது. இக்குழு, உலகெங்கும் பல கிளைகளைப் பெற்றிட்டது. இருப்பினும், இவற்றின் இணைப்புக்கள் சரிவரச் செயல்பட இயலவில்லை. ஆனால்; ஆங்காங்கே, இக்குழுக்கள், பல அரிய சோதனைகளை நிகழ்த்தியும்; சாதனைகளைச் சாதித்தும்பணியாற்றி வருகின்றன.

இவ் வெளியீடு 'உலக மத ஆய்வுக்குழு' வின் நாற்பதாவது ஆண்டு அறிக்கையாக (The World Religious Research Society's 40th Annual Report) வெளியிடப்படுகின்றது.

உலக மத ஆய்வுக் குழுவின் சோதனைகளால் விளைந்த சாதனைகளைச் செயலாக்கிக் காட்டிடக் கடந்த ஓராண்டு காலமாகத் 'தெய்வீக மருத்துவ மனை' (Mysticel Treatment Hospital) நடத்தப்பட்டு வருகின்றது. அது தனது வெற்றி நிறைந்த முதல் ஆண்டை முடித்து; இரண்டாவது ஆண்டைத் துவங்கியுள்ளது. எனவே, இவ்வெளியீடு தெய்வீக மருத்துவமனை'யின் ஆண்டு நிறைவு மலராகவும் (Souvenir) வெளியிடப்படுகின்றது.

இம் மலரின் மூலம் உலக மத ஆய்வுக்குழு தனது பணியினை அறிவித்துக் கொள்வதோடு; பலரும் இந்த நற்பணியில் பங்கு பெறவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுவித்துக்கொள்ளு கின்றது.

உண்மைகள், பெரும்பாலும் கசப்பானவை களே. உண்மைகளை, விரைந்து ஏற்றலோ. விரும் பலோ என்றும் ஏற்படா. இருப்பினும், "ஆராய்ச்சி யாளனின் கடமை; 'உண்மைகளை ஒளிக்காமல் உணர்த்தல்' என்பதேயாம்; இக்கருத்தின் முதிர்ச் சியே இவ்வெளியீடு.

ஞானகுரு சித்தர் கருவூரர்
C/o வெ. செகதீசன் B. Sc; 1, சிசுடர் ரோசு வீதி,
மேலப் பொன்னகரம், 2வது தெரு,
மதுரை -625 010

## முதல் பதிப்பின் முன்னுரை

காலத்தின் கட்டுக்கடங்கா வேகத்தாலோ! கற்பனையின் கணிக்கவொண்ணாத திறத்தாலோ!! கருத்துமாற்றத்தின் பேராற்றலாலோ!!! காலம்கால மாகக், கரைக்கவோ, களங்கப்படுத்தவோ, கட்டு டைக்கவோ முடியாத கருத்துக்களையே காணிக் கையாக்குகின்றேன்.

இவை, கன்னித்தமிழகத்தின் கருத்துக் கருவூ லங்கள், அறிவியல் களஞ்சியங்கள், கலைச்சோலை கள். இவற்றால், களைப்புக் களையப்படும்; அழிவுகள் தடுக்கப்படும்: தீராத நோய்கள் தீர்க்கப்படும்; மாறாத தொல்லைகள் மாற்றப்படும்.

இத்திரு நாட்டின் மண் (Soil), கல் (Stone) தாவரம் (Flora), விலங்கு(Fauna), மக்களினம்(Race), மொழி (Language), பண்பாடு (Culture), நாகரிகம் (Civilisation)... முதலியன அனைத்துமே காலத்தால் மிகமிகத் தொன்மையானவை; கருத்தால் மிக மிகப் பெருமை வாய்ந்தவை.

இவ்வுண்மைகளைத்தான் வரலாறுகளும், வரலாற்றுச் சான்றுகளும், அறிவியல் கண்டு பிடிப்புக்களும் (both inventions and discoveries) மெய்ப்பிக்கின்றன. ஆனால், இவற்றை, இத்திரு நாட்டினர் உணராமலும் உணரமுடியாமலும் இருக்கின்றனர்.

இத்திருநாடே, ஆன்மீகத்துறையில், மத வரலாற்றில்.... உலக அரங்கில் முதன்மையும் தலைமையும் பெறுதற்குரியது. இந்நிலை, சித்தர்கள் காலம் காலமாகக் காடுகளிலும், காறுற்றங் கரைகளிலும், காரிருள் கவிழ்ந்த குகைகளிலும் கண் மூடிய நிலையில் கருத்தை உள்ளடக்கி வாழ்ந்திட்ட காரணத்தால்; உலகுக்குப் புலப்படாமல் போயிற்று. மேலும் சித்தர்கள், 'சித்தன் போக்கு சிவன் போக்சு' என்று பிறரை எண்ணுமல் வாழ்ந்ததால் தமிழர்தம் செயல்திட்டமும். பயன் மிகுதியுமுடைய சமயம் (Religion) கடவுள் கலைகள் (Divine Arts) தெய்வீக ஆற்றல்கள் (Mystical Powers) முதலியன தமிழரின் விழிச்சிக்கோ, எழிச்சிக்கோ, செழிப்புக்கோ பயன்படாமல் போயின. இனி, அந்நிலை இல்லை.

நவகோடி சித்தர்களும், பதினெண் சித்தர்களும், பதினெட்டாம் படிக் கருப்புக்களும், எண்ணற்கரிய கடவுள்களும் - தெய்வங்களும், இறைகளும், தேவர்களும் தேவதைகளும், முனிவர்களும், சித்தியாளர்களும், புத்தர்களும், போத்தர்களும், பத்தர்களும்....

...உலவி வரும் இத்திருநாட்டின் அருமையும் பெருமையும் பழங்கதைகளாக இருக்க நேரிட்ட நிலையை உடனடியாக மாற்றியாக வேண்டும். இதற்காகப் பொங்கிப் பெருகியோடும் உணர்ச்சியும், செழுமையான முயற்சியும் நல்ல சூழலை உருவாக்கிடும்.

இனி, இத்திரு நாட்டின் இழிவை அழிக்க, அழிவைத் தடுக்க, இருளை அகற்ற, துயரைத் துடைக்க .. எண்ணற்ற பேராற்றல்கள் பணியேற்றிடும்.

**மனித இனம் இன்று; 'மின் விசை'** (Electricity) **'காந்தம்'** (Magnetism) **'நிலக்கரி'** (Coal) 'பெட்ரோல்' (Pertoleum) முதலிய சக்திகளைப் பயன்படுத்துவது போல்; விரைவில், 'தெய்வீக சக்தி' (Mystical Power) **யையும் பயன்படுத்திச் செழிப்பும், மகிழ்ச்சியும் மிக்க வாழ்வினைப் பெற்றிடும். அப்பொற் காலத்தை உருவாக்குவதே என் பணி.**

**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,**
கருவறை மூலவர்களின் அம்மையப்பர்,
குருமகாசன்னிதானம், ஞாலகுருசித்தர்
அரசயோகிக் கருவூரார்,
தெய்வீக மருத்துவமனை நிறுவனர்,
பதினெண்சித்தர் மடம், G.N.T சாலை,
காரனோடை, சென்னை- 600 067

## அணிந்துரை

எமது குருதேவரும், இந்து வேதநாயகமும், இந்துமதத் தந்தையும், நிறையக்ஞரும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியுமாகிய, அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் எந்த விதமான நிறுவன நிர்வாக அமைப்பும் தேவையில்லை; இந்து வேதக்கருத்துக்களையும் இந்துமதக் கருத்துக்களையும் உலகமக்கள் அனைவரும் புரிந்து கொண்டால்போதும் என்று செயல்படுகிறவர். இவருடைய ஆங்கிலச் சொற்பொழிவுகளும், தமிழ்ச் சொற்பொழிவுகளும் நுற்றுக்கணக்கில் ஒலிப் பேழைகளாக (Cossettes) உலாவந்து கொண்டிருக்கின்றன. இவருடைய ஆயிரக்கணக்கான அஞ்சல்கள் இயந்திர நகல்கள் எடுக்கப்பட்டு நாடெங்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

இன்றைக்கு 1991 என்ற ஆங்கிலக்கணக்கின்படி இந்துமத ஆண்டு என்ற் பதினெண் சித்தர்களின் காலக் கணக்கீடு 43,73,092 ஆண்டுகளாகின்றன. இதன்படி மூன்றுயுகங்கள் கடந்து நான்காவது யுகத்தில் 5092 ஆண்டுகள் ஆகின்றன. இவ்வளவு பெரிய நெடிய காலஇடைவெளியில் இந்த இந்து வேதம், இந்துமதம் தவிர எண்ணற்ற பல மதங்களை உருவாக்கியிருக்கிறது. அதாவது, தமிழில் வேதம் என்றால் ஏட்டறிவு; மதம் என்றால் வேதத்தின் செயல் வடிவம் அல்லது நடைமுறை என்று பொருள். இதன்படி தமிழில் உள்ள இந்து வேதத்தில் இருந்துதான் இந்த உலகில் தோன்றக் கூடிய எல்லா மொழியினருக்கும், இனத்தவர்க்கும், நாட்டவர்க்கும், காலங்கள்தோறும் தேவைப் படுகின்ற மதங்கள் பிறக்கின்றன அலலது பிறப்பிக்கப் படுகின்றன என்ற பேருண்மை நிலை நாட்டப்படுகிறது

இதைத்தான் இந்துவேதம், 'இம்மண்ணுலகில் தோன்றக் கூடிய அனைத்து வேதங்களும் மதங்களும் பதினெண் சித்தர்களுடைய அண்டபேரண்டம் ஆளும் இந்து வேதம் எனும் ஆலமரத்தின் விழுதுகளாகவோ அல்லது கிளைகளாகவோ அல்லது இலைகளாகவோ அல்லது கனிகளாகவோதான் இருக்கமுடியும்' என்று கூறுகிறது.

இந்த உலகில் தோன்றக்கூடிய மதங்கள் அனைத்திற்கும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியிலுள்ள இந்துவேதத்தின் செயல் வடிவான இந்துமதம்தான் மூலமாக, முதலாக, தாயாக, கருவாக, அடிப்படையாக, உள்ளீடாக இருக்கின்றது. இதனால்தான், இந்தஉலகில் தோன்றியுள்ள எந்த மதத்திலும் இல்லாத முழுமையான கருத்து நிலைகள், செயல் நிலைகள், காலக்கணக்கீட்டு அடிப்படையில் கூடிய வரலாற்று விளக்கங்கள், அருளாளர்களின் சாதனைகள் போதனைகள், மனிதன் பற்றிய பேருண்மைகள், மற்றப் பயிரினங்

கள், உயிரினங்கள் பற்றிய பேருண்மைகள், பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்ட பேரண்டங்கள் பற்றிய பேருண்மைகள், கடவுளர் உலகு பற்றிய பேருண்மைகள்... முதலிய எல்லா வகைப்பட்ட பேருண்மைகளும் இந்து வேதத்தில் தான் முழுமையாக இருக்கின்றன. இந்த இந்து வேதத்தில் முன்னூற்றுத் தொண்ணூற்ருறு (396) நூல்கள், இந்து மதத்தில் முப்பத்தாறு (36) நூல்கள் என்று ஆகமொத்தம் நானூற்று முப்பத்திரண்டு (432) நூல்களில் பதினெண்சித்தர்கள் கூறியுள்ள செய்திகள்; தமிழ்மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி என்ற பேருண்மையை விளக்குகின்றன.

இவ்வாறு, தமிழ் மொழியின் அருமை பெருமைகளை இங்குக் குறிப்பிட்டே இந்தத் தெய்வீக மருத்துவம் அல்லது ஆவிகளும் மனிதர்களும் என்ற அரியநூலுக்கு அணிந்துரை வழங்குகிறோம், யாம்.

அதாவது, தமிழ் மொழியில்தான் இப்படிப்பட்ட அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய, வீரிய கருத்துக்கள் அடங்கிய நூல்கள் வெளிவரமுடியும். இந்த நூல்கள் அருளுலக பொருளுலக இருள்களை எல்லாம் அகற்றும்! அகற்றும்! அகற்றும்!.

மனிதனுக்கு ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்று தனித்த நிலையில் இயங்கும் ஆற்றலுடையனவற்றின் கூட்டால் உருவாகும் சீவன்தான் வாழ்க்கையைத் தருகிறது. இப்பேருண்மையின் நுட்ப, திட்ப, ஒட்ப விளக்கங்கள்தான் ஆவி, பேய், பிசாசு, பூதம், சுரர், அசுரர், அரக்கர், அமரர், தேவர், பட்டவர், ஆண்டவர், தெய்வம், கடவுள், இறை ... முதலியவைகளுக்கு உரிய விளக்கங்களை வழங்குகிறது. இவற்றின் அடிப்படையில்தான் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களுக்கு, தெய்வீக மருத்துவம், மனிதர் மருத்துவம் என்ற இருபெரும் மருத்துவப்பிரிவுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

விரிவஞ்சி, இத்தெய்வீக மருத்துவநூலுக்கு எமது அணிந்துரையை நிறைவு செய்து கொள்ளுகிறோம்.

இறுதியாக, இம்மண்ணுலகுக்கு எல்லாவகையான வாழ்வியல் நெறிமுறைகளையும், உறவுமுறைகளையும், உரிமைமுறைகளையும், உணவுமுறைகளையும், உடைமுறைகளையும், தனிமனிதவாழ்வு குடும்ப வாழ்வு சமுதாயவாழ்வு அரசியல்வாழ்வு என்ற நான்கு வகைப்பட்ட வாழ்வியல் மதிப்பீடுகளையும் வழங்கியுள்ள பதினெண்சித்தர்கள்;

'மருந்தும் மந்திரமும் மனிதனின் கண்கள்' 'அருளுலகும் பொருளுலகுமே மனித வாழ்வின் அகமும் புறமுமாகும்' என்று கூறியுள்ள கருத்துக்களை அனைவரும் சிந்திக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறோம். இந்த நூலை அடுத்து குருதேவர் வெளியிட்டுள்ள ஆயிரக்கணக்கான அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் நூற்றுக்கும் மேலுள்ள புத்தகங்களையும் அனைவரும் வாங்கிப்படித்திட முற்படவேண்டும்.

அதற்காக ஞானச்சாரியார், இந்துவேத பாடசாலை அலுவலகம், அம்பத்தூர், சென்னை-53 என்ற முகவரிக்கும்; ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், தெய்வீக மருத்துவமனை, பதினெண்சித்தர் மடம் காரனோடை, சென்னை-67 என்ற முகவரிக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

அருட் தொண்டன், அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக்கடவுள் சன்னிதானம், அருள்மிகு உலகளந்த பெருமான் பெருந்தேவி சன்னிதானம், அருள்மிகு பாரதகால வீசுமாச்சாரியார் திருத் தோன்றல்.

பெ. சுப்பையா B.E;
கோட்ட மேலாளர்,
சோழன் போக்குவரத்துக் கழகம், மாயவரம்.

---

**அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார்**





## பரிந்துரை

இந்து முன்னேற்ற கழக நிர்வாகக்குழு அலுவலகம், பஃறுளி கம்புயூட்டர்சு, 12, சல்லிவான் தெரு, சாந்தோம், சென்னை-4

அருள்மிகு நெல்லை காந்திமதியம்மன் சன்னிதானம், முதல் விசயாலயச் சோழன் த பொன்னுசாமி B.E., MBA; நிர்வாகக் குழு அவைத்தலைவர்.

1) இந்து முன்னேற்றகழகத்தின் பாரம்பரியத் தலைவரும்; இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடத்தின் மடாதிபதியும், இந்துமதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியும், குவலய குருபீடம், குருதேவர், குருமகாசன்னிதானம், ஞாலகுருசித்தர், அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள் அருட்கொடையாக வழங்கியுள்ள ஆயிரக்கணக்கான அறிக்கைகளிலும், அறிவிக்கைகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களிலும் அன்றாடம் பலருக்கும் வழங்குகின்ற அருளுரைகளிலும் பூத்துக் குலுங்கும் கருத்துக்களில் ஒரு சிலவே இந்தத் 'தெய்வீக மருத்துவம்' என்ற நூலாக வடிவமெடுத்துள்ளன.

2) இந்தநூல் மருத்துவ உலகிலுள்ள அறியாமைகளுக்கும், தெரியாமைகளுக்கும், புரியாமை

களுக்கும் அவிழ்க்க முடியாத புதிர்களுக்கும், முடிவைத்தரும் கருத்து விளக்கங்களை மின்னல் கீற்றுக்கள் போல் கோடிட்டுக் காட்டுகின்றது.

3) இந்துவேதநாயகமாகவும், இந்துமதத் தந்தையாகவும் இருக்கின்ற அந்தணர் அண்ணல் ஞானச்சாரியார் அவர்கள் 'மூளைக்கோளாறுகளும், உடல் இயலாமைகளும்' (Mental disorders and physical Disabilities) என்று எழுதியுள்ள சித்தர் மருத்துவநூல் உலக மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்படவேண்டிய ஒருநூல்.

4) இவர் எழுதியுள்ள வரியியல் (கைரேகை, Palmistry), பெயரியல் (Nameology), பிறப்பியல் (சாதகம் Horos cope), அங்கவியல் (Studies of Physi cal Features), கனுநூல் (Dreamology), முற்பிறப்பும் மறுபிறப்பும் (Life Before Death and After Death), எண்ணியல் (Numerology), சொல்லியல் (Prediction by words), மனையடி சாத்தரம் (A study of House Structures), கோயில் விஞ்ஞானம்(Temple Sciences) தாந்தரீகக் கலைகள் (Tantric Arts), மாந்தரீகக் கலை கள் (Mantric Arts), பூசை, தவம், ஞானம், குண் டலினி, ஓகாசனம், யோகாசனம், ஞானக் காட்சி, கூடுவிட்டுக் கூடுபாய்தல், ககனப்பயணம், பத்தி, சத்தி சித்தி முத்தி நிலைகள் எனும் கடவுட் கலை கள்(Divine Arts) நூல்கள்; 'தமிழர்கள்தான் இம் மண்ணுலகின் பூர்வீகக் குடிகள்' 'தமிழ் மொழி



தான் இம்மண்ணுலகின் முதல் மொழி, மூலமொழி, மூத்தமொழி'; 'அருளூறு அமுதத் தெய்வீகச் செந் தமிழ் மொழியிலுள்ள இந்து வேதம்தான் இம் மண்ணுலகில் தோன்றக் கூடிய அனைத்து வகைப் பட்ட மொழியினருக்கும் இனத்தவர்க்கும், நாட்ட வர்க்கும் பொதுவானதாகப் படைக்கப்பட்ட வேதமாகும்'; 'தமிழர்களையே மூலவர்களாகவும் காவலர்களாகவும், நாயகர்களாகவும், வாரிசுகளா கவும் உடைய இந்து மதம் தான் மனித வாழ்க்கை பற்றிய எல்லா வகையான பேருண்மைகளையும் முறையாகவும், நிறைவாகவும் விளக்குகின்ற ஒன்று'... என்ற பேருண்மைகள் அனைத்தும் எமது குருதேவரின் தெய்வீக மருத்துவம் என்ற நூலில் மிகச் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டி விளக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, அண்ட பேரண்ட அருளுலக நாயகங்களாக விளங்கு கின்ற பதினெண்சித்தர்கள்;

'தன்னை அறியும் அறிவே மெய்யறிவு
பின்னை அறிவே பேயறிவு' என்ற கருத்தின் விளக்கமே இந்தத் தெய்வீக மருத்துவம் என்ற நூல். எனவே, இதை எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டுமாறு பரிந்துரை செய்கிறோம், யாம்.

அன்புள்ள
**முதல் விசயாலயச் சோழன்.**

## அறிமுகவுரை

**டாக்டர். R. சொக்கலிங்கம்** M.B.B.S.
மருத்துவ அதிகாரி, சென்னை மாநகராட்சி.

1) இந்தத் தெய்வீக மருத்துவம் என்ற நூல் அருளுலகிலும் பொருளுலகிலும் பேரார்வத்தோடு வரவேற்கப்படுகின்ற ஒன்ருக இருக்கின்றது. இதிலுள்ள செய்திகள் புதியவைகளாகவும், சுவையுடையவைகளாகவும் சிந்திக்கக்கூடியவைகளாகவும் இருக்கின்றன.

2) அருளுலகைப்பற்றிய பேருண்மைகள், கற்பனை மிகுந்த மதமாக இல்லாமல் அன்ருடம் மனித வாழ்வுக்குப் பயன்படக்கூடிய மருத்துவப் பேருண்மைகளாக இருக்கின்றன என்பதை இத் தெய்வீக மருத்துவ நூல் விளக்குகிறது.

3) என்னைப்போன்ற மருத்துவர்கள் அதிகமாக மதத்துறையில் ஈடுபடுவதில்லை என்பது உண்மைதான். ஆனல் நான், நமது பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருகுல ஆதீனம், குருகுலப் போதகர், நிறையக்ஞர், பரபிறம்மம், இந்து மதத்தின் முழுமுதல்தலைமை ஆச்சாரியார் குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானச்



சாரியார் அவர்களுடைய தமிழ்மொழிப் படைப்புக்களிலும், ஆங்கில மொழிப் படைப்புக்களிலும் பெருத்த ஈடுபாடு உடையவன். இவர் நூற்றுக் கணக்கில் எழுதியுள்ள நூல்களும், ஆயிரக்கணக்கில் தயாரித்துள்ள சித்தரடியான்கள் சித்தரடியாள்கள் சித்தரடியார்கள் எனப்படுபவர்களும், குமரி முதல் இமயம் வரை உள்ள இந்துக்களுக்கு மிகமிகச் சிறந்த அரிய பயன்மிகு தொண்டுகளை ஆற்றுகின்றன என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை இருக்கின்றது.

4) இவர் தமிழ் மொழி பற்றிக் கூறக்கூடிய கருத்துக்கள் ஒவ்வொரு தமிழனையும் கடைசி மூச்சு உள்ள வரை இவரை நினைக்கும்படிச் செய்யக்கூடியவை. எடுத்துக் காட்டாகக் கூற வேண்டுமென்ருல்; <u>நமது நாட்டுக்குரிய **'இந்தியா'** என்ற பெயரை இத்துணைக் கண்டத்திற்கு வைத்தவர்கள் தமிழர்கள்தான் என்ற பேருண்மையை விளக்கிடும் தமிழ் மொழிப் போக்கு ஆழ்ந்து சிந்தித்துப் பாராட்டுவதற்கு உரியதாகும். அதாவது, இந்து வேதத்தில் உள்ள 'சீவகாயந்திரி மந்திரம்' என்பதில் 'இந்து' என்ற சொல்லுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ச்சொற்களில் பொருள் விளக்கம் தரப்பட்டிருப்பதை இவர் தான் வெளியிட்டிருக்கிருர்.</u> இப்படி இந்து வேதத்திலிருந்து அகச்சான்றைக் கூறி; "'இந்து' என்ற சொல் ஓர் அழகிய பொருளாழம் மிக்க இனிய செந்தமிழ்

சொல்'' என்பதை தெளிவாகவும் அழகாகவும் விளக்குகிறுர்.

5) அதாவது, 'இந்து' என்ற சொல்லின் அடியாகவும்; இந்து வேதமும், இந்து மதமும் விளக்குகின்ற கருத்துக்களுக்கு உரிய 'இந்தியம்' என்ற சொல்லின் அடிப்படையாகவும் தான் 'இந்தியா' என்ற சொல் உருவாக்கப்பட்டது என்று இவர் தரும் விளக்கம் எண்ணி எண்ணி மகிழக்கூடியது.

6) இவருடைய நூற்றுக்கும் மேற்பட்ட அருட் பட்டங்களில் **'தமிழ் மெய்ஞ்ஞான சபைத்தலைவர்'** என்ற பட்டமும் ஒன்று. இப்பட்டத்திற்கேற்ப, இவர் தமிழ் மொழியில்தான் பதினெட்டு வகைக் காயந்திரி பூசை மொழிகளும் இருக்கின்றன; தமிழ்மொழியில்தான் இந்து வேதத்திற்குரிய 96 நூல்களும் இருக்கின்றன; தமிழ்மொழியில் தான், இந்து மதத்திற்குரிய முப்பத் தாறு (36) நூல்களும் இருக்கின்றன. எனவே, 'தமிழ் மொழிதான் வேதமொழி'; 'தமிழ் மொழி தான் தேவ மொழி' என்று எதுகையோடு, மோனை யோடு மிக அழகாக இவர் எழுதுவதும், பேசு வதும் கேட்டு இன்புறுவதற்கு உரியதாகும்.

6) இவர் அருளை மருந்தாகவும், விருந்தாக வும் வழங்குவதுபற்றி இந்தத் தெய்வீக மருத்துவ



நூலில் எழுதியிருக்கிறுர். இதற்கு விளக்கமாக தெய்வீக மருத்துவமனை ஒன்றையும் (Mystical Treatment Hospital) கடவுளர் நலமளிக்கும் மையம் (The Divine cure Centre) என்பனவற்றை இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் சென்னை செங் குன்றம், சோழவரம் காரனோடைக் கிராமத்தி லுள்ள பதினெண் சித்தர் மடத்தில் இந்து வேத பாடசாலை நடத்தி அத்திரியார், சாத்திரியார், சூத்திரியார், தோத்திரியார், நேத்திரியார், வேத் திரியார் என்று ஆறுவகைப்பட்ட இந்துமதக் கலைஞர்களை உண்டாக்கியும்; சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், மடாதிபதி, பீடாதிபதி, பண் டாரம், பண்டாரசந்நதி, பண்டாரசந்நிதி, அரிய வாள், சூரியவாள், சீரியவாள், பெரியவாள், நேரியவாள், வீரியவாள், ஏமகோடிப்பீடம், காம கோடிப்பீடம், சோமகோடிப்பீடம், வாமகோடிப் பீடம், ஆச்சாரியார்,... என்று வகைவகையான அருட்பட்டங்களைத் தமிழ் மொழியில் வழங்கி இந்து மதத்துக்கும் இந்து வேதத்துக்கும் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியன, அளப்பரியன், அளப்பரியன. சுருக்கமாகச் சொல்லப்போனுல் பலநூறு பல்கலைக் கழகங்கள் ஒன்று சேர்ந்து முயன்றுலும் சாதிக்க முடியாத சாதனைகளையும், போதிக்க முடியாத போதனைகளையும் இவர் சாதித்து வருகிறுர், போதித்து வருகிறுர்.

7) இவருடைய எண்ணத்திலும் எழுத்திலும் பேச்சிலும் 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடு'

என்ற குறிக்கோளும்; 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்போம்' என்ற கொள்கையும்; 'எதையும் அன்பு வழியில், அறவழியில், அருள் வழியில், அமைதி வழியில் அடைய முயல வேண்டும்' என்ற செயல்திட்டமும் மிகமிகத்தெளிவாக இருக்கின்றன. எனவே, "இவருடைய எல்லா நூல்களையும், எல்லோரும் படிக்க வேண்டும்" என்ற வேண்டுகோளையே இத்தெய்வீக மருத்துவ நூலிற்கு எனது அறிமுகவுரையாக வழங்குகிறேன், நான்.

அன்புடன்
டாக்டர் R. சொக்கலிங்கம் M.B.B.S.

---

மெய்ஞ்ஞானக் கொடி





## ஆசிரியர் கருத்து

உயிரினங்களின் வளர்ச்சி (Evolution) பற்றி, டார்வின் (Darwin Charles Robert 1809- 1882) ஆராய்ந்து கண்டதாகக் கூறப்படும் உண்மைகள்; பலகோடி ஆண்டுகளுக்கு முன்னரே தமிழரால் கண்டு பிடிக்கப் பட்டவைகள் ஆகும். கிடைத்துள்ள இலக்கியச் சான்றுகளின்படி பார்த்தால்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இவ்வுண்மைகள் தமிழரால் உணரப்பட்டிருந்தன என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

இன்றைய தென்னிந்தியாவும், கடலுக்குள் மூழ்கிய குமரிக்கண்டமும் (Lost Lemuria) உலகில் தோன்றிய முதல் நிலப் பரப்புக்கள் என்பதால்; ஆயிரத்து முன்னூற்றைம்பத்தொன்பது அண்டங்களையும் ஆளும் பதினெண் சித்தர்கள்; இந்நிலப் பகுதியிலேயே தங்களின் பணியைத் துவக்கினர். அதனால்தான், தமிழர்களுடைய இனத்தில், நாட்டில், மொழியில் பதினெண்சித்தர்களின் பாரம்பரியம் அமைந்துள்ளது. அப்படி அமையப் பெற்றும்; தமிழர் தங்களை உயர்வாக எண்ணாததாலும், அளவுக்கதிகமான அடக்கப் பண்பைப் பெற்றிட்டதாலும் தங்களின் அருந்திறங்களை, பயன் மிக்க சமயக் கருத்துக்களை உணரத் தவறி

விட்டனர். அதனால், இவற்றை உலகம் உணரும் வாய்ப்பு ஏற்படாமல் போயிற்று.

டார்வின், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த வரே. ஆனால், கி.பி. முதலாம் நூற்றாண்டிலேயே; இவர் கண்ட உண்மைகள் கூறப்பட்டிட்டன. அந்த இலக்கியம் இன்றும் இருக்கின்றது.

இந்நாட்டுச் சமயத்துறையில் "சித்தியார்" நிலையை அடைந்தவராகக் கருதப்படும் மாணிக்க வாசகர்; சைவசமயக்குரவர் நால்வருள் முதல்வர். இவரது காலம், களப்பிறர்களின் ஆட்சித் துவக்க மாகிய கி. பி. முதலாம் நூற்றாண்டு (Ist A. D) ஆகும். அவர் வழிபட்ட இடங்கள் [Temples and places of worship] முதலிய சான்றுகளால் அவரே, வரலாற்றுப்படி கிடைத்துள்ள சமயவாதிகளில் முதல்வர்.

இவர், சித்தர்களின் கருத்துக்களையும், வழிவழி வந்த சமயக் கருத்துக்களையும் தெய் வீக நிலைகளையும்... முழுமையாக உணர்ந்து பாடி யுள்ளார். அப்படியவர் பாடுவதில் டார்வின், 'மனித உடல், ஓருயிர்ப் பிராணியிலிருந்து வளர்ந்து; குரங்காகிப் பின் 'மனித நிலையை அடைந் தது' என்று கண்டறிந்த உண்மை காணப்படு கின்றது. அத்துடன், இவர், 'மனித உடல் மட்டு மின்றி, உயிரும் இந்தப் படிப்படியான மாற்றங் களைப் பெற்றிட்டது' என்றதோர் அரிய உண்மை யையும் வெளியிடுகின்றார்.



"புல் ஆகிப் பூடாய்ப்; புழுவாய், மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப்; பறவையாய் பாம்பு ஆகி
கல்லாய், மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி, முனிவராய், தேவராய்ச்
செல்லாஅ நின்ற; இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து; இளைத்தேன்... "

**—திருவாசகம்**

மாணிக்கவாசகர், இப்படி, 'உயிர்கள் பல பிறப்புக்கள் எடுத்து; மனித நிலையை அடைந்தது' என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டவை தான் "நாடி சோதிடம்", "பிறப்பியல்" [Horoscope, சாதகம்], "அங்கவியல்" (சாமுந்திரிகாலட்சணம்,) (Physical Structural Studies) "மனையியல்" (மனை யடிசாத்திரம்), "பெயரியல்" (பெயர் இராசி Nameolgy), "வரியியல்" (கைரேகை Palmistry), "எண்ணியல்" (Numerology), முதலிய இன்னோ ரன்ன பிறகலைகள்.

இந்த உண்மையினை ஈண்டு நினைவுபடுத் தியது; "தமிழர், அறிவியலில் (Science) மிகச் சிறந்த நிலையினைப் பெற்ற பிறகே; சமயத்துறை யில் (Religion) ஆழ்ந்த, அதிகக் கருத்தைச் செலுத்தினர்" என்பதை அறிவிப்பதற்காகவே.

தமிழரின் அறிவியல் சாதனைகள் [Scientific achievements] வரலாற்றுக்கும் முந்திய காலத்

திலேயே (in the Pre historic Age) முழுமை பெற்றிட்டன. அதனால்தான், தமிழர்கள், 'மனிதன் மண்ணிலோ விண்ணிலோ ஆட்சி செய்வதால் பயனில்லை!; மனிதன் தன்னைத்தானே (உடல், உள்ளம், உணர்வு, அறிவு, உயிர் ஆகிய ஐந்தினையும்) ஆட்சி புரிவதில்தான் பயனுண்டு' என்று முடிவு கட்டினர். 'இம்முடிவிற்கேற்ப உண்டாக்கப்பட்டவைகளே தெய்வீகக் கலைகள் [Mystical Arts]' கடவுட்கலைகள் (Divine Arts), சமயவாழ்வு [Religious Life], சித்தர் தத்துவங்கள், [Siddharism] ...முதலியவைகள்.

மனிதன், நிலவை(சந்திரன், திங்கள்)மட்டுமல்லாமல், மற்ற எல்லாக் கோள்களையும் (Planets), மீன்களையும் [Stars] ஆட்சி செய்யும் நிலையைப் பெற்றாலும்; அவன், தன்னைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும்வரை; உலகில், நிலையான அமைதியோ; நிறைவோ; ஒற்றுமையோ; மகிழ்ச்சியோ ஏற்படாது. அதனால், மனிதன் கற்பனை செய்யும் பேரின்ப நிலை உருவாகவே இயலாது. இதைத் தான், பதினெண்சித்தர்கள்,

"தன்னை யறியும் அறிவே மெய்யறிவு
பின்னை யறிவு பேயறிவு.."

என்றனர். 'மனித வாழ்வு, பிறப்பில் துவங்கி, இறப்பில் முடிவடைகின்ற ஒன்றா?' அல்லது, 'குறிப்பிட்ட நிலையில் துவங்கிக் குறிப்பிட்ட நிலையில் முடியும் ஒன்றா?'; 'மனிதவாழ்வு பிறப்புக்குமுன் எப்படியிருந்தது?'; 'இறப்புக்குப் பிறகு எப்படியிருக்



கும்?"; "மனிதனுக்குப் பிறப்பால் உண்டாகின்ற சொந்தங்களும், உறவுகளும், மொழியும், இனமும், நாடும் நீடித்தவையா?; உண்மையானவையா? பல பிறப்புக்களில் தொடர்புடையவையா?'; 'மனிதன் தன் வாழ்வில் உண்டாக்கிக் கொள்ளும் உறவு, நட்பு, சொத்து, மக்கள்... முதலியவைகளால் நன்மை அடைகிறானா?'; 'மனிதன், தன்னுடைய அறிவால், ஆர்வத்தால், அயரா உழைப்பால் அருந்திறனால் தேடிச் சேர்க்கும் செல்வங்கள் செல்வங்களா?'; 'மனிதன், தான், அனுபவித்து மகிழ்வதாகக் கூறும் இன்பங்கள் உண்மையிலேயே இன்பங்கள்தானா?'; 'மனிதன் தனது உடலுக்கு வாழ்வு தேடுகிறானா? அல்லது, உயிருக்கு வாழ்வு தேடுகிறானா?'; 'மனித வாழ்வில் வெளிப்படும் போட்டி, பொறாமை, பகைமை, வஞ்சகம், சூழ்ச்சி, கொலை, களவு, ஏமாற்று, பொய்...... முதலிய இழிந்த பண்புகள் உடலில் வருபவையா?, அல்லது உயிரால் வருபவையா?'; 'மனிதன், தனித்துப்பிறந்து, தனித்து இறப்பவன் தானா?' அல்லது குறிப்பிட்ட குடும்பம், இனம்... என்ற சங்கிலித் தொடர்பை உடையவனா?'; 'மனிதன், தன் வாழ்நாள் முழுதும் போராடியே வாழ்வதால்; அவனுக்கு, இறப்பில் அமைதி கிடைக்கிறதா?'; 'இறப்பு, உடலுக்கு முடிவையளிக்கிறதா? அல்லது உயிருக்கு முடிவையளிக்கிறதா?'; மனிதன், ஏன் பிறக்கிறான்? ஏன் இறக்கிறான்? ஏன் தொல்லையுறுகிறான்?...... என்ற வினாக்

களுக்கு விடையே இல்லையா?; 'மனித உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு என்ன? இத்தொடர்பு எப்படி ஆரம்பித்து, எப்படி முடிகின்றது?'; மனித மனம் ஏங்கித் தவிக்கும் பற்று, பாசம், அன்பு, காதல், நட்பு... முதலிய உணர்ச்சிகள் பொருளுடையனவா? அல்லது பொருளற்றனவா?'; ...... என்ற இன்னோரன்ன பிற வினாக்களுக்கு விடை கூறும் பெரும் பணியினை ஏற்றுள்ளவன் நான்.

நான், என் பணிக்குப் பலரின் ஆர்வமும், ஆதரவும், ஒத்துழைப்பும்.........இன்றியமையாதன என்று எண்ணியே செயல்பட்டு வருகின்றேன். எனது, வெற்றி தோல்வி தனி மனிதனின் வெற்றி தோல்வியாக இருக்கலாகாது என்பதாலேயே; மத ஆய்வுக் குழுவின் பணியோடு இணைந்து பலரையும் பங்கேற்கச் செய்ய விரும்புகிறேன். எனவேதான், உலக மக்களை ஒற்றுமைப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்ட 'உலக மத ஆய்வுக்குழு'வின் தலைமைப் பொறுப்பைக் கடந்த பதினான்கு ஆண்டு காலமாக ஏற்றுப் பணிபுரிகிறேன்.

இத் துறைகளில் ஆர்வமுள்ளவர்கள் இத் துறைகளை அறிந்து கொள்ளலாம்; இத்துறைகளில் ஆராய்ச்சி செய்ய விரும்புகிறவர்கள், முறையான பயிற்சியினைப் பெறலாம்.

மனிதன், நோய், மூப்பு, பிணி, சாக்காடு...... முதலிய துன்பங்களை வெல்ல வேண்டும்; மனித சமுதாயம் ஒற்றுமையோடும், மன நிறைவோடும்,



மகிழ்ச்சியோடும் வாழவேண்டும் என்பதற்கான பணிகள் துவக்கப்பட்டு விட்டன. எனவே, ஒவ்வொரு தனி மனிதனும் தங்களுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு, ஊழ்வினை, விதி, குடும்ப தெய்வம், ஊர்க்காவல் தேவதை (தேவதை, தேவர்), நாட்டுக கடவுள், தான் விரும்பும் குருவான முனிவர், இருடி, ... முதலியவர்களை அறிவு விழித்த நிலையில் ஆராய்ந்தறிந்து புரிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகே குருவழியாகப் பூசை, தவம், ஞானம், ஓகாசனம், யோகாசனம், குண்டலினி, ஞானக்காட்சி, ஆவி ஆன்மா ஆருயிர் பிரித்துணருதல், ... முதலிய கலைகளைப் பயிற்சி செய்ய முயற்சி செய்யவேண்டும். இவற்றை விட்டு விட்டு மனிதன் தனக்கு விவரம் தெரிந்த நாள் முதல் காசுபணம் சம்பாதிப்பதிலும், சொத்துக்கள் சேர்ப்பதிலும், சொந்தங்களை வளர்த்துக் கொள்வதிலும் பதவி புகழ் தேடுவதிலும், தங்களுக்கு விருப்பமான இன்பங்களைத் தேடி அனுபவிப்பதிலுமே தங்களுடைய வாழ்நாளை; முயலைத் துரத்தும் வேட்டை நாய் போல் செலவிட்டுக் கொண்டிருப்பதிலேயே பழக்கப்பட்டிருக்கின்றான் அல்லது பழக்கப்பட்டு விட்டான். இவற்றால் தான், தனிமனிதர்களுக்குள் அகம்பாவம், ஆணவம், பேராசை, போட்டி பொறாமை முதலியன காட்டுத் தீ போல் திடீர்த் திடீரென்று எரிய ஆரம்பிக்கின்றன - கொழுந்துவிட்டு எரிய ஆரம்பிக்கின்றன. அக்காட்டுத் தீயால்தான் குடும்ப வாழ்வு; சொந்தக்காரர்களோடு கூடி வாழுகின்ற

வாழ்வு; தெருவிலுள்ளவர்களுடனும், அக்கம் பக்கத்திலுள்ளவர்களுடனும், ஊராருடனும், சுற்று வட்டாரத்தவருடனும், ...மெய்யான பற்றோடும், பாசத்தோடும், தோழமையோடும், நட்போடும், அன்போடும் கூடிவாழும் வாழ்வும் வாழமுடியாத அவல கேவல நிலைகள் வளருகின்றன. இவற்றையெல்லாம் போக்க வேண்டுமென்றால், இந்தத் தெய்வீக மருத்துவம் பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்த ஒன்றாக ஆகிட வேண்டும். அதற்காகத்தான் இந்தத் தெய்வீக மருத்துவம் அச்சடிக்கப்பட்டு மீண்டும் வெளியிடப்படுகிறது. இப்பணிகள் நிறைவுறும் காலமும் அண்மைத்தே. உங்கள் நிலை என்ன? உங்களாலான உதவிகளை மனமுவந்து நல்குக.

அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்; இந்து மதத்தந்தை, இந்துவேதநாயகம், இந்துவேத பீடம், இந்து மதத்தின் முழுமுதல் தலைமை ஆச்சாரியக் குருபீடம், 3. NGO நகர், பொன்னேரி, PIN 601204



## தமிழும் தெய்வீக மருத்துவமும்

(1) இம்மண்ணுலகின் முதல் வேதமும் மூல வேதமும் முழு நிறைவான வேதமும் உலக மக்கள் இனங்களுக்கும் மொழிகளுக்கும் நாடுகளுக்கும் உரிய பொதுவான வேதமுமான இந்து வேதம்; இந்த அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் வழங்கப்பட்டிருக்கிறது, வழங்கப்பட்டிருக்கிறது, வழங்கப்பட்டிருக்கிறது.

(2) பிண்டம், அண்டம், பேரண்டம், அண்டபேரண்டம் எனும் நான்கினையும் பற்றிய உண்மைகளை விளக்குகின்ற ஒரே ஒரு மொழியாக பதினெண் சித்தர்களாலும் பதினெட்டாம்படிக் கருப்புக்களாலும் உருவாக்கப்பட்டுக் கோடானு கோடி ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்ற தொன்மையான, மேன்மையான, நன்மையான உண்மையான, நுண்மையான, திண்மையான, ஒண்மையான, ஒப்புயர்வற்ற மொழிதான், தமிழ்மொழி.

(3) ஆயிரங்கோடி தேவதைகளும், முப்பத்து மூவாயிரங்கோடி தேவர்களும், நாற்பத்தெட்டா

யிரங் கோடி இருடிகளும், தொண்ணூற்றாறாயிரங் கோடி கணங்களும், நூற்றெட்டாயிரங்கோடி முனிவர்களும் புரிந்து பேசுகின்ற தேவதை மொழி, தேவ மொழி, கணங்களின் மொழி, இருடிகளின் மொழி, முனிவர்களின் மொழி என்ற பெருமைக்குரிய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற அருள் மொழி செந்தமிழ் மொழிதான்.

(4) அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும் வழங்கியுள்ள இந்துவேதத்திற்கும் இந்துவேத மதமான இந்துமதத்திற்கும் உரிய (i) நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுள்களுக்கும் (ii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடு நிலையினர்களுக்கும் (iii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களுக்கும் (iv) நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருளாளர்களுக்கும் (v) நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருளாளிகளுக்கும் (vi) நாற்பத்தெட்டு வகைப்பட்ட அருளாடு நாயகங்களுக்கும் (vii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட மருளாளர்களுக்கும் (viii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட மருளாளிகளுக்கும் (ix) நாற்பத்தெட்டு வகைப்பட்ட மருளாடு நாயகங்களுக்கும் (x) நாற்பத்தெட்டு ஈசுவராச்சாரியார்களுக்கும் (xi) நாற்பத்தெட்டு ஆதி ஈசுவராச்சாரியார்களுக்கும் (xii) நாற்பத்தெட்டு சிவாச்சாரியார்களுக்கும் (xiii) நாற்பத்தெட்டு ஆதி சிவாச்சாரியார்களுக்கும் (xiv) நாற்பத்தெட்டு பரமாச்சாரியார்களுக்கும் (xv) நாற்பத்தெட்டு ஆதிபரமாச்சாரியார்களுக்கும்



(xvi) இதுவரை தோன்றியுள்ள நாற்பது சங்கராச்சாரியார்களுக்கும் [இனிமேல் தோன்றப்போகும் எட்டு சங்கராச்சாரியார்களுக்கும்] (xvii) இதுவரை தோன்றியுள்ள முப்பத்திரண்டு ஆதிசங்கராச்சாரியார்க்ளுக்கும் (இனிமேல்தோன்றப்போகும்பதினாறு ஆதி சங்கராச்சாரியார்களுக்கும்) (xviii) நாற்பத்தெட்டு வகைப்பட்ட பத்தியாளர்களுக்கும் (xix) நாற்பத்தெட்டு வகைப்பட்ட சத்தியாளர்களுக்கும் (xx) நாற்பத்தெட்டுவகைப்பட்ட சித்தியாளர்களுக்கும் (xxi) 48 வகைப்பட்ட முத்தியாளர்களுக்கும் (இந்த இருபத்தோரு அருளுலகத்தவர்களை வணங்கும் வண்ணமாகத்தான் இருபத்தோரு உருத்திராக்கங்கள் கோர்க்கப்பட்ட உருத்திராக்க மாலையையே அருளுலகப் பயிற்சி முயற்சியாளர்கள் முதன் முதலில் அணிந்துகொள்ளும் மரபு பதினெண் சித்தர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது); தாய்மொழியாக இருப்பது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியே யாகும். அதாவது, மேலே பட்டியலிட்டுக் காட்டப்பட்ட இருபத்தோரு வகைப்பட்ட அருளுலகத்தவர்களும் பேசுகின்ற ஒரே ஒரு மொழிதான் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி.

(5) கடவுள்களில் அருவக் கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவ அருவக் கடவுள்

கள், உருவக் கடவுள்கள் என்று நான்கு வகைப் பட்ட கடவுள்கள்; உருவ அமைப்புக்களால் பிரித்து விளக்கப்படும் தெய்வீகப் பேருண்மைகள் மிகத் தெளிவாக இருக்கின்ற ஒரே ஓர் ஒப்புயர் வற்ற மொழி, நமது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்.

(6) கடவுள்கள் தாங்களாகவே தோன்றுகின்ற முறைகளை அடிப்படையாகக் கொண்டு திருக்கல் தருக்கல் கருக்கல் என்று மூன்று வகையாகவும்; கடவுள்கள் அருளாளர்களால் தோற்றுவிக்கப்படு கின்ற முறைகளை குருக்கல் என்றும் ஆக நான்கு வகைக் கடவுள்கள் இருக்கின்ருர்கள் என்ற பேருண்மையை விளக்குகின்ற ஒரே ஓர் ஒப்புயர் வற்ற மொழி நமது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்.

(7) கடவுள்கள் வாழுவதற்குரிய இடங்களை (i) 48 வகைப்பட்ட கருவறைகள் (ii) 48 வகைப் பட்ட வெட்டவெளிக்கருவறைகள் (iii) 48வகைப் பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள் (iv) 48 வகைப்பட்ட கோயில் மூலக்கருவறைகள் என்று நான்கு பெரும் வகைகளாகப் பிரித்து; அவற்றை எப்படி எப்படி, எந்த எந்த இடங்களில் உருவாக்க வேண்டும் என்ற அருகட்டலைகளை உடைய ஒரே ஓர் ஒப்புயர்வற்ற மொழி நமது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான்.

(8) இப்படி எண்ணிக்கை யிட்டுக் காட்டக் கூடிய அளவு எண்ணற்ற அருளாற்றல்களையும்,



அருட் பண்புகளையும், அருளுலகப் பேருண்மை களையும், அருட்கலைகளையும் ஒருங்கே அமையப் பெற்ற ஒப்புயர்வற்ற ஒரே ஒரு மொழி நமது அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி தான். எனவேதான், இந்தச் செந்தமிழ் மொழியில் தெய்வீக மருத்துவம் என்ற ஒன்று உருவாக்கப் பட்டிருக்கிறது

(நிறைவுற்றது)



ஞாலகுருசித்தர் அரசயோகி கருவூரர்

## தமிழர்களும் தெய்வீக மருத்துவமும்

இன்றுள்ள இந்த மண்ணுலகம் ஒரு நூறு கோடி ஆண்டுகள் நெருப்புக்கோளமாக இருந்தும்; பிறகு ஒரு நூறு கோடி ஆண்டுகள் பனிக்கட்டிக் கோளமாக இருந்தும்; அடுத்து ஒரு நூறு கோடி ஆண்டுகள் நீர்க்கோளமாக இருந்தும்; அடுத்து ஒரு நூறு கோடி ஆண்டுகள் கல்லும் மணலும் மண்ணும் தோன்றுகின்ற கோளமாக இருந்தும்; இறுதியாக ஒரு நூறு கோடி ஆண்டு காலத்தில் பயிரினங்களும் உயிரினங்களும் படிப்படியாகத் தோன்றுகின்ற உயிர்க்கோளமாக அல்லது உயிரினக் கோளமாக இருந்தும் தயாராகிவிட்ட ஒன்று என்ற பேருண்மையினைத் தமிழ் மொழியிலுள்ள இந்து வேதமும் இந்து வேதமதமான இந்து மதமும் தான் விளக்கி உரைக்கின்றன.

(2) இந்த மண்ணுலகில் தோன்றிய முதல் மனித இனத்திற்கு அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த பதினெண் சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புக்களும் தங்களுடைய தாய் மொழியான தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்துத் தமிழர்களாக ஆக்கினுர்கள். அதாவது, இம்



மண்ணுலகில் தோன்றிய முதல் மனித இனமே தமிழினமாக ஆக்கப்பட்டது. எனவேதான், தமிழர்களே இம் மண்ணுலகின் முதல் மனிதர்கள், மூல மனிதர்கள் என்று பாராட்டப்படுகின்ருர்கள்

(3) தமிழர்களுடைய தாய் மொழியான தமிழ் மொழிதான் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழி என்பதால்தான்; இந்தத் தமிழர்களால் மட்டுமே அண்ட பேரண்ட அருளுலகத்தவர்களின் வாரிசுகளாகவும், வேத வித்துக்களாகவும், தத்துவ வித்துக்களாகவும், செயல் சித்தாந்த வித்துக்களாகவும், அருளுலகத்தவரோடு தொடர்புகொள்ளக்கூடிய 'அருளுலக மூலவர்களாகவும்';' 'அருளுலக முதல்வர்களாகவும்','அருளுலகக் காவலர்களாகவும்','அருளுலக நாயகங்களாகவும்', 'அருளுலக வழிகளாகவும்', 'அருளுலக வழி காட்டிகளாகவும்', 'அருளுலக வழித் துணைவர்களாகவும்'...தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிருர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிருர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிருர்கள். எனவேதான், இம் மண்ணுலகிலுள்ள மனித இனங்களுக்குள் தமிழ் இனத்தவர்கள் மட்டுமே அடிக்கடி கடவுள்களைச் சந்திக்கவும்; கடவுளர்களின் உலகத்தோடு தொடர்புகொள்ளவும், கடவுள்களை அடிக்கடி தமிழர்களைச் சந்திக்க வரும்படிசெய்யவும் கடவுள்களை அடிக்கடி தமிழர்களாகப் பிறக்கும்படி செய்யவும், கடவுள்களின் குமாரர்களையும் பதிலிகளையும்

தொண்டர்களையும் தூதுவர்களையும் அடிக்கடித் தமிழர்களிடையில் தோன்றும்படி செய்யவும்... முதலிய ஆற்றல்களைப் பெற்றிருக்கிறார்கள்.

(4) தமிழர்கள்தான் கடவுள்களின் விநோதமான, வியப்பான விளக்குவதற்கரிய, அறிவுக்கு அப்பாற்பட்ட வகை வகையான வடிவங்களையெல்லாம் நேரிற்கண்டறிந்து அவற்றை ஓவியங்களாகவும், சிலைகளாகவும், சாத்தர, சாத்திர, சாத்திரச் சடங்குகளாகவும், தோத்தர, தோத்திர, தோத்திறப் போற்றிகளாகவும் உலகறிய வெளியிட்டிருக்கிறார்கள். எனவேதான், தமிழர்கள்தான் அருளுலகைப் பற்றி முழுமையாகத் தெரிந்தவர்கள்; அறிந்தவர்கள்; புரிந்தவர்கள்; தெளிந்துஉணர்ந்தவர்கள் என்று இந்துவேதமும் இந்துவேத மதமான இந்து மதமும் ஆணித்தரமாகக் கூறுகின்றன.

(5) தமிழர்கள்தான் கடவுள்களைத் தாங்கள் தேர்ந்தெடுக்கின்ற இடங்களில் வந்து தங்கவும், தாங்கள் கூறுகின்ற அல்லது விரும்புகின்ற பொருள்களில் வந்து தங்கவும் செய்யக்கூடிய உயிர்ப்புப் பூசை நெறி முறைகள், புத்துயிர்ப்புப் பூசை நெறி முறைகள் எனும் இரு பெரும்வகைப் பூசை முறைகளையும் பெற்றிருக்கிறார்கள். இது மட்டுமன்றி, தமிழர்கள்தான் நாள் கோள், மீன் இராசிப் பாதிப்புக்களுக்கும், நாகப் பாதிப்புக்களுக்கும் ஊழ்வினைப் பாதிப்புக்களுக்கும், பிறப்பியல் பாதிப்புக்களுக்கும், வரியியல் பாதிப்புக்களுக்கும் (கைரேகை), அங்கவியல் பாதிப்புக்களுக்கும், பெயரியல் பாதிப்புக்களுக்கும், மனையியல் பாதிப்புக்களுக்கும்... மற்ற பாதிப்புக்களுக்கும் பரிகாரப் பூசை நெறிமுறைகளை கண்டறிந்துள்ளார்கள்.

(6) தமிழர்கள் தான் அருட்சத்திகளைத் தங்களுடைய விருப்பம்போல் மானுட வாழ்வில் அழிவுக்கும் ஆக்கத்திற்கும் பயன்படுத்த முடியும் என்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். இதில் குறிப்பாக: (i) காற்று, (ii) கருப்பு, (iii) பேய், (iv) பிசாசு, (v) பில்லி, (vi) சூனியம், (vii) ஏவல், (viii) செய்வினை, (ix) வைப்பு, (x) கழிப்பு, (xi) மருந்து, (xii) கண்ணேறு எனும் பன்னிரண்டு கலைகளைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனால், இவை அனைத்தும் இந்து வேதமும் இந்து மதமும் அனைத்து வகைப்பட்ட கடவுள்களுக்கும் உரிய பொது வடிவாகக் குறிப்பிடும் இலிங்க வடிவுக்குக் கட்டுப்பட்டவைதான் என்ற பேருண்மையையும் கண்டுபிடித்துள்ளார்கள். இதன் சான்றாகத்தான் தஞ்சைப் பெரிய கோயில் இலிங்கத்திற்கு முன்னால் உள்ள பெரிய நந்திக்குப் பன்னிரண்டு பற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(7) தமிழர்களில்தான் வாழையடி வாழையென அருளாளர்கள் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர்களில்தான் 63 நாயன்மார்களும் 12ஆழ்வார்களும், 96தொகையடியார்களும், பட்டி

னத்தார்களும், தாயுமானவர்களும், அருணகிரியா ரும், இராமலிங்க அடிகளாரும் தோன்றிக் கடவுள் களின் வடிவங்களையும் வாழ்வியல்களையும் செயல் நிலைகளையும் அளப்பரிய அருட்பண்புகளையும் நேரிலேயே கண்டு, பெற்றும் உற்றுணர்ந்தும் அருளூறு பத்திப் பாடல்களை எழுதியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். இவற் றால், தமிழர்கள்தான் அருளுலகப் பேருண்மை களை அதிகமாகத் தெரிந்தவர்கள் என்பதும்; அருளுலகத்தோடு நிலையான தொடர்புகளை வைத் திருப்பவர்கள் என்பதும்; மிகமிகத் தெளிவாகத் தெரிகின்றது, மிகமிகத் தெளிவாகத் தெரிகின்றது, மிகமிகத்தெளிவாகத் தெரிகின்றது.

(8) இப்படி, மேலே பட்டியலிட்டுக் காட்டி யுள்ள காரணங்களால்; தமிழர்கள்தான் தெய்வீக மருத்துவத் துறையின் தலைசிறந்த மருத்துவர்கள்!; தமிழர்கள்தான் தெய்வீக மருத்துவத் துறையின் தலை சிறந்த மருத்துவர்கள்!!; தமிழர்கள்தான் தெய்வீக மருத்துவத் துறையின் தலை சிறந்த மருத் துவர்கள்!!! என்ற பேருண்மை தெள்ளத் தெளி வாக விளங்குகின்றது. அதாவது, தமிழர்கள்தான் தெய்வீக ஆற்றல்களை மருந்தாக மக்களுக்கு வழங்கி தெய்வீக மருத்துவம் செய்யக்கூடிய உரி மையையும் பெருமையையும் உடையவர்கள், உடையவர்கள், உடையவர்கள் என்ற பேருண்மை தெளிவாகிறது.



## தமிழ்நாடும தெய்வீக மருத்துவமும்

1. இன்றுள்ள தென்னிந்தியா தான் கடலுக் குள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தின் மிஞ்சிய மிகப் பெரிய நிலப் பரப்பாகும். அதாவது, இன்றுள்ள தென்னிந்தியா தான் இந்த உலகிலுள்ள எல்லா நிலப்பகுதியை யும் விட மிகமிகத் தொன்மையானது; மிகமிகப் பழமையானது. எனவேதான், இந்தத் தென்னிந்தி யாவே 'அருள் அணுக்கள்', தெய்வீக ஆற்ற லுடைய அணுக்கள்', வற்றாது ஊற்றெடுக்கின்ற அருள்நிலமாக இருக்கின்றது.

2. அருளுலகின் வாரிசுகளாகவும், மூலவர் களாகவும், முதல்வர்களாகவும், வித்துக்களாகவும் காவலர்களாகவும், நாயகங்களாகவும் உள்ள தமிழர்கள் இந்தத் தென்னிந்தியாவில் இன்றைய தமிழ்நாட்டில் தான் வாழ்கிறார்கள். மேலும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி தமிழ்நாட்டில்தான் அதிகமாகப்பேசப்படுகின்றது, அதிகமாகப் பேசப்படுகின்றது, அதிகமாகப் பேசப்படுகின்றது. எனவே, இந்தத் தமிழ்நாடு தான் அருளுலகின் கருவறையாகவும் கருவூலமா கவும், நாற்றங்காலாகவும், நாற்றுப் பண்ணையாக

வும், விதைப் பண்ணையாகவும் இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது என்ற பேருண்மை மிகத் தெளிவாக விளங்குகின்றது.

3. இம்மண்ணுலகின் முதல் வேதமாகவும்; மூலவேதமாகவும்; அனைத்து மொழியினருக்கும் இனத்தவருக்கும், நாட்டவருக்கும் உரிய பொது வேதமாகவும் கடவுள்களாலேயே காலங்கள் தோறும் தேவையான திருத்தங்களைச் செய்து புதுப்பித்துத் தரப்படுகின்ற வேதமாகவும்; கடவுள்கள் அடிக்கடி மனிதர்களை வந்து சந்திக்கும்படி செய்கின்ற வேதமாகவும்; மனிதர்கள் அடிக்கடி கடவுளைச் சந்திப்பதற்கு உதவும் வேதமாகவும்; கோடிக்கணக்கான கடவுள்களுக்கிடையில்உள்ள வடிவ வேறுபாடுகளையும், உடலின் வண்ண வேறுபாடுகளையும், உடலின் தோற்ற மாற்ற வேறுபாடுகளையும், வாழ்வியல் வேறுபாடுகளையும், விருப்பு வெறுப்புக்களையும், அருட்சத்தி நிலைகளையும், அருளாட்சி எல்லைகளையும், பிறப்பு நிலைகள் பற்றியும், இறப்பு நிலைகள் பற்றியும், பிறப்பிறப்பற்ற பெருநிலைகள் பற்றியும்... உண்மையான செய்திகளைக் கூறுகின்ற மெய்யான வேதமான இந்து வேதம் ஏட்டளவிலும் நாட்டளவிலும் முறையான நெறி வாழ்வினைப் பெற்றிருப்பது தென்னிந்தியாவிலுள்ள தமிழ்நாட்டில்தான்; தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில்தான்; தென்னிந்தியாவி தமிழ் நாட்டில்தான். இந்தத் தமிழ்நாட்டில் தான் இந்த மண்ணுலகின் அருளுலகப் பொருளுலக இருளகற்றும் அருளாட்சிப் பணியையும், அருட்பணி விரிவாக்கத் திட்டப் பணியையும் இவ்வுலகின் இறுதிவரை செய்திடக் கூடிய பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் இந்தத் தமிழ்நாட்டில்தான் தோன்றிடுவார்கள் என்ற இந்துவேதச் செய்தி மூலம் இத்தமிழ் நாடுதான் என்றென்றும் அருளுலகின் கருவறையாகவும், கருவூலமாகவும் நாற்றங்காலாகவும் நாற்றுப் பண்ணையாகவும் விதைப்பண்ணையாகவும் இருந்திடும், இருந்திடும், இருந்திடும் என்ற பேருண்மை விளங்குகின்றது.

4. அருளை அனுபவப் பொருளாக விளைவித்துத் தரக்கூடிய (i) நான்மறைகள் (ii) நான்முறைகள் (iii) நாநெறிகள் (iv) நான் வேதங்கள் எனும் நான்கும்; (i) நான் சுருதிகள் (ii) நான் ஆரணங்கள் (iii) நான் ஆகமங்கள் (iv) நான்மீமாம்சைகள் எனும் நான்கும்; (i) நவநாதங்கள் (ii) பதினெண் சித்தங்கள் (iii) முப்பத்தாறு ஓதங்கள் (iv) தொண்ணூற்றாறு போதங்கள் எனும் நான்கும்; (i) மூன்று வகை நேமங்கள், (ii) மூன்று வகை நியமங்கள், (iii) மூன்று வகை நிடதங்கள், (iv) மூன்று வகை நிட்டைகள், (v) மூன்று வகை நீதிகள் எனும் ஐந்தும் நிலையாகத் தமிழ் நாட்டில்தான் வாழையடி வாழையெனச் செயல் நிலையில் வாழ்ந்து வருகின்றன, வாழ்ந்து வருகின்றன, வாழ்ந்து வருகின்றன

என்ற பேருண்மைகள் மூலம் தமிழ்நாடுதான் இம்மண்ணுலகின் அருளுலகத்திற்குக் கருவறை யாக, கருவூலமாக, நாற்றங்காலாக, நாற்றுப் பண்ணையாக, விதைப் பண்ணையாக இருக்கின் றது! இருக்கின்றது! இருக்கின்றது! என்ற பேருண்மை நிலை நாட்டப்படுகின்றது; அல்லது நிலை நிறுத்தப்படுகின்றது.

5. இம்மண்ணுலகிலேயே (i) அருகம்புல் லும் (ii) ஆவாரஞ் செடியும் (iii) எருக்கஞ்செடி யும் (lv) வன்னிமரமும் (v) வேங்கைமரமும் (vi) மருத மரமும் (vii) மா மரமும் (viii) பன்னீர் மர மும் (ix) புளிய மரமும் (x) வேப்ப மரமும் (xi) அரசமரமும் (xii) ஆலமரமும் (xiii) எறும்பும் (xiv) ஈயும் (xv) நண்டும் (xvi) நத்தையும் (xvii) மீனும் (xviii) ஆமையும் (xix) முயலும் (xx) சிலந்திப் பூச்சியும் (xxi) யானையும் (xxii) நாரை யும் (xxiii) கோழியும் (xxiv) மயிலும் (xxv) கருங் குருவியும் (கரிச்சான் குருவி) (xxvi) காடையும் (xxvii) காக்கையும் (xxviii) கிளியும் (xxix) குருவி யும்... கடவுள்களை வேண்டி பத்தி செய்து சத்தி பெற்று, சித்தியுற்று முத்தியடைந்த வரலாறுகள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன, தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன, தமிழ்நாட்டில்தான் இருக் கின்றன. எனவேதான், தெய்வீக மருத்துவம் நிகழ்வதற்கும், நிகழ்த்தப்படுவதற்கும் சிறந்த இடமாகத் தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கி



றது, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது, தேர்ந்தெ டுக்கப்பட்டிருக்கிறது.

6. இன்றைக்கு உள்ள நிலப்பரப்புக்களில்; அதா வது, ஐந்து கண்டங்களில் ஒவ்வொரு கண்டத் திலும் குறிப்பிடத்தக்க அளவு; மிகத் தொன்மை யான, பழமையான, பூர்வீகமான, இந்த உலகில் முதன்முதல் தோன்றிய நிலப்பரப்பான இளமுறி யாக் கண்டத்தின் (இளமை மாருத கண்டம்) ஒரு சிறு பகுதியாவது இருக்கின்றது; சேர்ந்திருககின் றது; அல்லது ஒட்டிக் கொண்டிருக்கிறது என்பது உண்மை. எனவேதான், தமிழ்நாட்டின் மரபுப்படி உள்ள ஐந்திணை வாழ்வு, ஐந்து வகைப்பட்ட நிலப் பிரிவுகள், நமசிவாய என்ற ஐந்தெழுத் துக்கள்,... முதலியவற்றின் வடிவாக இந்த உல கம் ஐந்து கண்டமாக இருக்கிறது.

7. இவற்ருல், தமிழ்நாட்டின் அருளுலக, பொரு ளுலக கொள்கைகளும், கோட்பாடுகளும், குறிக் கோள்களும்தான் ஐந்து கண்டத்திலும் மெய் யான ஆட்சியைச் செய்ய முடியும். மற்ற ஆட் சிகள் நிலையிலா வாழ்வுடையவையே. எனவே, தமிழ்நாட்டின் தெய்வீக மருத்துவம்தான் ஐந்து கண்டங்களுக்கும் உரியது. அதாவது, தமிழ்நாட் டின் தெய்வீக மருத்துவம்தான் ஐந்து கண்டத்து மக்களுக்கும் தெய்வீக மருத்துவத்தின் மூலம் அரிய பயன்களை உரிய அளவிலும், பெரிய அள

விலும் விளைவித்துத் தரமுடியும். அதாவது, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மூலிகைகளும் வேறு எந்த நாட்டிலும் கிடையாது. எல்லாக் கண்டங்களிலுமுள்ள மூலிகைகள் தமிழ்நாட்டில் கிடைக்கும். தமிழ்நாட்டிலிருந்துதான் எல்லாக் கண்டங்களுக்குமுரிய கடவுள்கள், கடவுள்களுக்குரிய கோயில்கள், இவர்களை விளக்கும், விளக்கி வாழவைக்கும் மதங்கள் முதலியவை அனைத்தும் தமிழ் நாட்டிலிருந்துதான் சென்றிருக்கின்றன; சென்று கொண்டிருக்கின்றன, செல்லப் போகின்றன. இப்பேருண்மைக்குரிய சான்றாகவும், ஊன்றாகவும் இருப்பதுதான் தெய்வீக மருத்துவம். அதாவது, தெய்வீக மருத்துவர்கள் அன்றைக்கும், இன்றைக்கும், என்றைக்கும் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு எழுப்புகின்ற தெய்வீக ஒலி அலைகளும் (The Divine Sound), தெய்வீக ஒளிக் கற்றைகளும் (The Divine Light Rays) உலகம் முழுவதும் சென்று தெய்வீக ஆற்றலை (The Mystical Power) நோயாளிகளின் நோய்க்கு மருந்தாகவும், நோயாளிகளின் பசிக்கு விருந்தாகவும் பயன்பட்டு நலம் விளைவிக்கின்றன. எனவே, தமிழ்நாடுதான் தெய்வீக மருத்துவத்தின் பிறப்பிடம், இருப்பிடம், காப்பிடம். [The Tamil Nadu is the Birth Place, the Living Place, the Preservatory Place, ... of the Mystical Treatment.]

*[நிறைவுற்றது]*



## உலக மத ஆய்வுக்குழு
## குறிக்கோள்கள் (Mottoes)

'ஒன்றை அறிவதற்குக் கண்ணால் காண்பதும், கையால் தொடுவதும் மட்டும் வழிகளல்ல''

''உனக்குப் புரியவில்லை, தெரியவில்லை என்பதற்காக எதையும் மறுக்காதே! புறக்கணிக்காதே'',

''மனித குல வரலாறே மதம்'',

''அண்டங்களை விளக்கும் கலைக் களஞ்சியமே கோயில்'',

''தெய்வீகமும் மருந்தும் மனிதனின் கண்கள்'' என்ற கருத்துக்களை மெய்ப்பித்தல்.

இக்குழு, அரசியல் மேதை உயர்திரு எம் என். ராய் [887-1954] அவர்களாலும், மாபெரும் விஞ்ஞான மேதை டாக்டர் ஐன்சுடீன் (1889—1955) அவர்களாலும் உலக மக்களை ஒன்றுபடுத்த உருவாக்கப்பட்டது.

இக்குழு, உலகிலுள்ள மதங்கள் அனைத்தும் ஒன்றுபடுதற்குரிய வாய்ப்பொன்று உருவாக்கப்படுமேயானால் அதுவே, மனித இனத்துக்கு உயிராகவும் உயர்வாகவும் அமையும் என்ற கருத்துடையது. இதற்காக, இக்குழுவினால் மதஆய்வு முயற்சிகள் உலகெங்கும் துவக்கப்பட்டன. அம்

முயற்சிகள் பல சிறந்த சோதனைகளை நிகழ்த்தின. அவற்ருல், பல பயன்மிக்க சாதனைகளை நிகழ்த்தின. அவற்ருல், பல பயன்மிக்க சாதனைகள் சாதிக்கப்பட்டன.

மத வேறுபாடில்லாமல், ஏறத்தாழ எல்லா மதங்களிலும் காணப்படும், 'நல்வினை', 'தீவினை', 'வீடுபேறு', 'நரகம்', 'பிறப்பு', 'இறப்பு', 'மறுபிறப்பு' 'முற் பிறப்பு', 'விதி', 'ஊழ்வினை', 'மாயைகள்', 'மறைவுகள்', 'மறைகள், 'தோற்றம்', 'தெய்வீக ஆற்றல்கள்', 'புராண இதிகாசங்கள்', 'கோயில்கள்', 'வழிபாட்டு முறைகள்', 'வழிபாடுகள்', 'பலி பொருள்கள்', 'விழாக்கள்', 'நிமித்தங்கள்', 'பிறப்பியல்', 'எண்ணியல்', 'கைரேகை', 'கண்ணியல்', 'செய்கையியல்', 'குறிபார்த்தல்', 'பில்லி', 'சூன்யம்', 'ஏவல்', 'செய்வினை', 'பேய்', பிசாசு'.......முதலியன முறைப்படி ஆராயப்படுகின்றன.

இந்த ஆய்வுகள், உலகெங்கும் பகுத்தறிவு முறையில்; விஞ்ஞானச் சூழலில் நிகழ்த்தப்படுகின்றன. இவற்றின் முடிவுகள், முடிவில்லாத பல கருத்துக்களுக்கும், கற்பனைகளுக்கும், நம்பிக்கைகளுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் முடிவளிக்கும். அவை, மனித சமுதாயத்துக்கு விடிவையளிக்கும்.

மத ஆய்வுக் குழுவின் சாதனைகள், மக்களின் அன்ருட வாழ்வில் நேரடியாகப் பயன்படக்கூடிய



தகுதியுடையன. குறிப்பாக, மத ஆய்வுக்குழுவின் சாதனைகள், மருத்துவத் துறையில் (Medical Field) மாபெரும் புரட்சியை விளைவித்துள்ளன.

உலகெங்கும் பரந்தும் வளர்ந்தும் வருகின்ற மருத்துவத் துறையிஞல் பல நோய்களுக்கு முடிவு கட்ட முடியவில்லை; அத்துடன், நோய்களின் பெருக்கத்தையும் தடுக்க முடியவில்லை; மருத்துவத் துறையிஞல், புரிந்துகொள்ள முடியாத நோய்களும் மிகுதியாக உள்ளன. அதஞல், மருத்துவத் துறை, 'தெய்வீக மருத்துவ முறையை' ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.

தெய்வீக மருததுவம், 'மந்திரத்திஞல், மட்டுமே நலப்படுத்திடக்கூடிய நோய்கள்'; 'மருந்தும் மந்திரமும் கலந்து பயன்படுத்தப்பட்டு நலப்படுத்திடக்கூடிய நோய்கள்', 'மருந்திஞல் மட்டுமே நலப்படுத்திடக் கூடிய நோய்கள்' என்று மூன்று பெரும் பிரிவுகளை உடையது. இம் மூன்றில் முதலிரண்டும் தெய்வீக மருத்துவ முறைக்கு உரியன. மூன்ருவது குறிப்பாகச் சித்த மருத்துவத் துறைக்கும் மற்ற மருத்துவத் துறைக்கும் உரியது. எனவே, இத்தெய்வீக மருத்துவம், எல்லா அரசினர் மருத்துவமனைகளிலும் செயலுக்கு வரல் நல்லது.

இவை பற்றிய ஆய்வுகளுக்குத் தங்களின் ஒத்துழைப்புத் தேவை. அன்புகூர்ந்து, தங்களுடைய

அனுபவங்களையும், தாங்கள் அறிந்தவைகளையும் தக்க ஆதாரங்களுடன் தெளிவாக எழுதியனுப்பவும். 'மத ஆய்வுக் குழுவில் பங்குபெறும் ஆர்வமுள்ளவர்களும் தொடர்பு கொள்ளவும்.

குருமகா சன்னிதானம்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
உலகமத ஆய்வுக்குழு
C/o. த. பொன்னுச்சாமி
10, டிரசுட் பாக்கம் தெற்கு, மந்தைவெளி, சென்னை, 28.

## அந்தணர் அண்ணல்
## ஞாலகுரு
## ஞானச்சாரியார்





## ஓராண்டுப் பணியால்...

1. உலக மத ஆய்வுக் குழுவின் சாதனைகள் ஏட்டுச் சுரைக்காய்களாக; அறிவுலகக் காட்சிக்குரியனவாக இருந்திட்டன. அந்நிலையில், மாற்றம் விளைவிக்க; எடுத்துக் கொண்ட முயற்சிகளின் மலர்ச்சியே "தெய்வீக மருத்துவ மனை". 1929-இல் துவக்கப்பட்ட இக் குழு, தனது நாற்பதாவது ஆண்டு நிறைவு அறிக்கையைப் பெருமையோடு வெளியிடும் நிலை; இந்த ஓராண்டுப் பணியால்தான் ஏற்பட்டது.

2. இன்றைய மக்களுக்கு, "மதம் அபின்", "மதம், மனித வாழ்வுக்கு முட்டுக்கட்டை", "மதம், தேவையற்றவைகளையும், பயனற்றவைகளையும் மட்டுமே உடையது", "மதம், நம்பமுடியாத கட்டுக்கதைகளையும் ஆபாசக் கற்பனைகளையுமே கொண்டது", "மதம், படிப்பறிவில்லாதவர்களின் வாழ்க்கை முறை", "மதம், ஏழைகளின் மயக்கமருந்து", "மதம் பணக்காரர்களின் பொழுது போக்கு", "மதம், சூழ்ச்சிக்காரர்களின் சுரண்டல் சாதனம்"... என்ற கருத்துக்களிலேயே நாட்டமும், நம்பிக்கையும் உள்ளது.

இந்த நாட்டமும், நம்பிக்கையும் பயனுடையதல்ல, சரியானதல்ல என்பதை ஓராண்டுப் பணியால் தெளிவாக்க முடிந்துள்ளது. மேலும், மதத்தால், மனிதவாழ்வின் அன்றுடப் பழக்க வழக்கங்களும், உணர்வுகளும், உறவுமுறைகளும், தேவைகளும் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என்ற உண்மை இந்த ஓராண்டுப் பணியாலேயே தெளிவாக்கப்பட்டுள்ளது. இப்படி, இவ்வோராண்டுப் பணி, மனித சமுதாயத்தின் போக்கிலும், நோக்கிலும், ஊக்கிலும் எப்படியோ ஏற்பட்டிட்ட தடைகளையும் தவறுகளையும் அகற்றியுள்ளது.

3. மனிதனின் அகம்பாவமும், ஆணவமும், வெறியுணர்ச்சியும், பேராசையும், பொருமையும், பகைமையும், வீம்பும், பழிவாங்கும் உணர்வுமே உயர்ந்த தெய்வீகக் கலைஞர்களை (Mystics) விடுத்துச் சாதாரண மந்திரவாதிகளை (Magicians, Black artistes and Witches) உருவாக்கின.

இதனால், மதத்தின் பெருமையும், அரிய பயன்களும் பாதிக்கப்பட்டுவிட்டன. அதாவது, இழிந்த பைசாசக் கலைகளால் (Black Art, Magic and Witch Craft, Sorcery) பெருமளவு தெய்வ அருளும், மதமும் பாதிக்கப்பட்டன. அதோடு, மேற்கூறியபடி, மந்திரக் கலைகளின் பெயரால் ஏமாறுபவர்களும், ஏமாற்றுபவர்களும் பெருகிட நேரிட்டது.



இந்நிலையை மாற்றிட முடியும் என்ற நம்பிக்கையும்; அதற்குரிய திட்டங்களும் இந்த ஓராண்டுப் பணியால் உருவாகியுள்ளன.

4 உலகிலுள்ள, எல்லா மருத்துவமனைகளிலும், தெய்வீக மருத்துவ முறைகளான, (Methods of Mystical Treatment) "மயில் தோகை வைத்து மந்திரித்தல்", "யாகம் செய்து அருள் வழங்கல்", "பூசை செய்து மந்திரித்து தாயத்து முடிகயிறு அணிவித்தல்", "வேப்பிலைப் பாடம் போடல்", "உடுக்கையடித்தல்" முதலியவற்றின் மூலம்; 'மூளைக் கோளாறு', 'மன நோய்', 'நரம்புத் தளர்ச்சி", "உடல் அசதி", "குறிப்பிட்ட அங்கத்தில் நோவு", "எரிச்சல்", "முறைக் காய்ச்சல்", "நினைவாற்றல் பாதிப்பு", "இரத்த அழுத்தம்", "மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குண்டாகும் காய்ச்சல், கட்டி, செறிமானக் கோளாறு", "அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்குண்டாகும் எரிச்சல், அசதி, சுவையுணர்வுப் பாதிப்பு", "நடுத்தர வயதினருக்கு ஏற்படக்கூடிய அச்சம், அமைதியின்மை, தூக்கமின்மை, பதட்டம், காரணமில்லாத கவலை, சோம்பல், தளர்ச்சி", "பச்சை வாதம்" ... ஆகிய அனைத்தையும் நலப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை இந்த ஓராண்டுப் பணியாலேயே வலுப்பட்டுள்ளது.

5. இத் தெய்வீக மருத்துவப் பணியை உலகம் முழுவதும் பரப்பத் தெய்வீக மருத்துவர்களை

(Doctors of Mysticism) முறையாகக் கல்விச் சாலைகளிலேயே உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையும் இவ்வோராண்டுப் பணியாலேயே ஏற்பட்டுள்ளது.

இவ்வோராண்டுப் பணியால், தமிழகத்தின் கோயில்கள், ஏன் உருவாக்கப்பட்டன? எதற்காக உருவாக்கப்பட்டன? எப்படியெப்படி உருவாக்கப்பட்டன? ... என்ற வினாக்களுக்கு விடை கிடைத்திருக்கின்றன. அத்துடன், இவ்வோராண்டுப் பணியால்தான்; தமிழ்ச் சமுதாயம் மறக்கவும் மறுக்கவும் முற்பட்டுவரும் கோயில்கள்; மீண்டும் தமிழர்களின் அன்றாட வாழ்வில் பெரும்பங்கு வகிக்கும் நிலை உருவாகியுள்ளது.

6. ஓராண்டுப் பணியால், இன்றைக்கு வளர்ந்துள்ள விஞ்ஞான அறிவின் (Scientific Knowledge) துணைகொண்டும் "ஆவி உலகம்" (World of Spirits) பற்றிய ஆராய்ச்சிகள் செய்யப்பட்டால்; ஆவிகளைக் கொண்டே தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கு வாழ்வுகளிலும் ஏற்படக்கூடிய பெரும்பாலான தொல்லைகள், துன்பங்கள், சிக்கல்கள், சிதைவுகள், சீரழிவுகள், நலிவு மெலிவுகள், தவறுகள்... முதலியவைகள் பெருமளவில் உடனுக்குடன் தடுத்தற்கரி நலம் விளைவிக்கக்கூடிய பொன்னான வாய்ப்புகளை உருவாக்கலாம் என்று கருதப்படுகிறது.



இவை, கற்பனையாகக்கூட நம்பமுடியாதவையாகத் தோன்றும். ஆனால், ஆராய்ச்சி உலகம் இக்கருத்துக்களை நம்பத்தக்கவைகளாக ஆக்கியிருப்பது இந்த ஓராண்டுப் பணியால்தான்.

எனவே, சித்தர்கள், "மண்ணிலே விண்ணைப் பார்", "மண்ணும் விண்ணும் ஒன்றுச்சு தடி" என்று கூறியுள்ளவை பொருளுடையனவே.

இன்றைய மனிதன், விஞ்ஞானச் சாதனங்களால்; விண்ணில் சென்று; மண்ணைக் கண்டு மகிழ்கின்றான். ஆனால், கற்பனைக்கும் எட்டாக் காலத்திலேயே தமிழன், மண்ணில் விண்ணைக் கண்டு மகிழ்ந்தான்.

தமிழர்தம் அரும்பெரும் தெய்வீகக் கலைகள்; உலகையே பெருமகிழ்வுக்குரியதாக்கும் பேராற்றல் படைத்தவை. இவற்றை, மடமையென்று (Superstition) மறுத்தும் வெறுத்தும் ஒதுக்காமல்; முறைப்படி ஆராய்ந்து பார்ப்பது இன்றைய தமிழரின் இன்றியமையாக் கடமையாகும்.

**நான்**

"இத்திருநாடு மறைத்ததால் மறைந்தவைகளும், மறுத்ததால் மறக்கப்பட்டவைகளும் இறந்தொழியவில்லை என்பதற்குச் சான்றே நான்."

## என் வாழ்க்கை

உண்மைகளைக் கண்டறிவதில் உள்ள தொல்லைகளையும், துன்பங்களையும்விடக் கண்டறிந்த உண்மைகளை வெளியிடுவதிலும், செயலாக்குவதிலுமே தொல்லைகளும் துன்பங்களும் அதிகம் என்ற உண்மையின் விளக்கமே என் வாழ்க்கை. எனவேதான், என் வாழ்க்கையைப் பற்றிச் சுருக்கமாக ஒரே ஒரு சொற்றொடரில் சொல்ல வேண்டுமென்றால் என்னுடைய வாழ்க்கை "ஒரு தெய்வீக சோதனை"("My Life is the Test of Divinity") என்றுதான் கூற வேண்டும்.

## என் முயற்சி

"விண்ணும் மண்ணும் பின்னிப் பிணைந்துள்ள இணைப்பை விளக்குவதே என் முயற்சி".

ஞானாச்சாரியார், குருமகாசன்னிதானம்,
ஞாலகுரு சித்தர், அரசயோகிக் கருவூறார்,
சித்தர் கருவூறார் அருட்பணி விரிவாக்கத் திட்டமையம்,
இந்து முன்னேற்ற கழகம்,
மே/பா.: சித்தரடியான் இர. இராமசாமி
6/447 திருவள்ளுவர் நகர், சிறுமுகை;
கோவை மாவட்டம் - 641 302



## தெய்வீக மருத்துவமும் கடவுட் கலைகளும்
### (MYSTICAL TREATMENT AND DIVINE ARTS)

'தெய்வீக மருத்துவம்', தனிப்பட்டவர்களின் உடல்நலம் பாதிக்கப்பட்டால்; அதற்குக் காரணமாக,

1. முற்பிறவிப் பயன் (ஊழ்வினை Karma)
2. பிறந்த நேரப் பயன் (விதி Fate)
3. மாந்தரீக முறையில் (Witch Craft and Black Art)
4. தெய்வீகக் குறை (Mystical Defect)
5. பேய் பிடித்தல் (Haunting of Spirits and Ghosts)
6. நச்சுப் பூச்சிகள் கடித்தல் (biting by poisonous insects)

என்ற இந்த ஆறுவகைப் பாதிப்புகளைக் கூறுகின்றது.

இப்படித் 'தெய்வீக மருத்துவம்' குறிப்பிட்ட எல்லையைப் பெற்றிருப்பது; இத்துறை வளர்ச்சியடையாததாலா? அல்லது இத்துறையின் ஆற்றலே இவ்வளவுதானா? என்பதை இனிமேல் நிகழ்த்தப்படும் ஆராய்ச்சிகளே நிர்ணயிக்க இயலும்.

தெய்வீக மருத்துவம் மூடநம்பிக்கைக்கு (Supersition) உரியது, கண்மூடித்தனமான நம்பிக்கைக்கு (blind belief) உரியது என்ற கருத்து நிலவுகிறது. அதனால் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு; இம்மருத்துவ முறையில் மருத்துவம் அளித்து; அதன் மூலம் கிடைக்கப்பெறும் விழுக்காடுகளைக் (Percentage) கொண்டே இம் மருத்துவத்துறையின் உண்மையினைக் கணிக்க வேண்டும்.

இத் தெய்வீக மருத்துவம் நெருப்பில், நீரில், விபத்தில், கொலையில், தற்கொலையில் மாள்பவர்கள் பேய்களாக மாறி மக்களைத் தொல்லைக்கும், அழிவுக்கும் உள்ளாக்குவதாகக் கருதுகிறது. அதற்காகவே, கைரேகை, எண்ணியல், பிறப்பியல், சோதிடம், மை பார்த்தல், குறிசொல்லல், ... முதலிய கலைகள் உண்டாக்கப்பட்டன. இக்கலைகளால், கணித்து, மேற்குறித்த ஆபத்துக்கள் ஏற்படாமல் தடுக்கப் பல வழிகள் உள்ளன.

இவை, அநாகரிகமான கற்பனைகளா? அல்லது பயன்மிக்க உண்மைகளா? என்பதை ஆராய வேண்டும். இவ்வாராய்ச்சிகள் தனிப்பட்ட நபரால் நடத்தப்படக்கூடாது. ஏனென்றால், தனிப்பட்டவரின் விருப்பு, வெறுப்பு, கற்பனை, அச்சம் ...... முதலியவைகளால் தெளிவான முடிவுகள் கிடைக்காமல் போகலாம்.



தெய்வீக மருத்துவத்தில் "மஞ்சக்காமாலை", "அம்மை நோய்", "மாதவிடாய்த் தொல்லை", "பச்சைவாதம்", "பயித்தியம்", "தன்னம்பிக்கையின்மை", "திடீர்ச் சரிவுகள்", "திடீர்ப் பொருள் இழப்புகள்", "திடீர் மனமாற்றங்கள்", "திடீர்ப் பிரிவுகள்"... முதலிய நோய்கள்; பேய்கள் உலகத்தாலும், தெய்வங்களின் உலகத்தாலுமே உண்டாவதாகக் கருதப்படுகின்றன. இந்நோய்களுக்குத் தெய்வீக மருத்துவத்தைத் தவிர வேறு வழியில்லையென்றும் கூறப்படுகின்றன. இவற்றை ஆராயல் வேண்டும்.

தெய்வீக மருத்துவத்துக்குத் துணையாகப் படைக்கப்பட்டவையே கடவுட் கலைகள் (Divine Arts). இக்கலைகள் "மந்தரம்", "மந்திரம்", "மந்திறம்" "மாந்தரம்", "மாந்தரீகம்", "தந்தரம்", "தந்திரம்", "தந்திறம்", "தாந்தரம்", "தாந்தரீகம்", "எந்தரம்", "எந்திரம்" "எந்திறம்", "ஏந்தரம்", "ஏந்தரீகம்", "தவம்", "வேள்வி", "சித்தம்", என்று பதினெட்டு வகைப்படும். இவைகளில் முதல் ஐந்தான "மந்தரம்", "மந்திரம்", "மந்திறம்", "மாந்தரம்", "மாந்தரீகம்" முதலியவைகள் 48 வகைப்பட்ட கோயில்களைச் சூழலாகக் கொண்டு செய்யப்படுபவைகள். இரண்டாவது ஐந்தான "தந்தரம்", "தந்திரம்", "தந்திறம்", "தாந்தரம்", "தாந்தரீகம்" முதலியவைகள் இடுகாடு, சுடுகாடு, நடுக்காடு... என்ற 18 வகைக் காடுகளைச் சூழலாகக் கொண்டு செய்யப்

படுபவைகள். மூன்றாவது ஐந்தான "எந்தரம்", "எந்திரம்", "எந்திறம்" "ஏந்தரம்", "ஏந்தரீகம்" முதலியவைகள் அருளாளர்களின் வாழ்விடங்களான பத்திப் பாட்டைகள், சத்திச் சாலைகள், சித்திச் சோலைகள், முத்தி மன்றங்கள், தவப் பள்ளிகள் எனும் ஐந்து வகைப்பட்ட இடங்களைச் சூழலாகக் கொண்டு செய்யப்படுபவை. நான்காவது மூன்றான "தவம்", "வேள்வி", "சித்தம்" ஆகியவை எநதச் சூழலிலும் செய்யப்படுபவை; ஆனால், இவற்றிற்குச் சிறப்பான சூழல், அருவிகள் நிறைந்த மலைச்சாரலும், காடுகள் நிறைந்த ஆற்றங்கரைகளும், ஆற்றிடைக் குறைகளும், கடலிடைத் தீவுகளும், குன்றுகளும், குகைகளும் ஆகும்.

மேலே குறிப்பிட்ட பதினெட்டு வகைக் கலைகளும் நான்கு வகைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இந்நான்கு பிரிவுகளிலுள்ள முதல் மூன்று பிரிவுகளை தெய்வீக உலகில் திரிசூலி (கபாலீசுவரி, கொற்றவை, பராசத்தி; என்றும் காளி, சூலி, நீலி என்றும் பிரித்துக் காட்டும் மரபு உண்டு...) என்று குறிக்கப்படுகிறது. இத்"திரிசூலி" மக்களின் அன்றாட வாழ்வுக்கு பல இன்றியமையாத நன்மைகளைச் செய்கின்றன.

1. குடும்பத்தில் ஒற்றுமையின்மை, உடல் நலக் கோளாறு, உளநலக் கோளாறு, வருவாய்ப் பாதிப்பு, மணமாகாமை, பகைவர் தொல்லை ...



முதலிய சிக்கல்கள் இருப்பின் முதல்வகைத் தகடுகள், சக்கரங்கள் மந்தரம் முதல் மாந்தரீகம் வரை வைத்துப் பூசை செய்தால் இக்குறைகள் நீங்கும்.

2. நடத்துகின்ற தொழிலில் தொல்லைகள், இழப்புக்கள், தோல்விகள், வளர்ச்சியின்மை, வருவாயின்மை... முதலிய குறைகள் இருக்குமேயானால் "இரண்டாவது வகைத் தகடுகள், சக்கரங்கள்" (தந்தரம் முதல் தாந்தரீகம் வரை) வைத்துப் பூசை செய்தால் இக்குறைகள் நீங்கும்.

3. பாழடைந்த கோயில்கள், ஆற்றல் குறைந்த கோயில்கள், புகழ் மங்கிய கோயில்கள், புதியதாகக் கட்டப்படும் கோயில்கள் முதலியவற்றிற்கு "மூன்றுவது வகைத் தகடுகள், சக்கரங்கள்" (எந்தரம் முதல் ஏந்தரீகம் வரை) பயன்படுததப்பட்டால் உயிர்த்துடிப்பும் உயர்வும் உருவாகும்.

இப்படித் "திரிசூலி" மூன்று வகைத் தகடுகளாக, சக்கரங்களாக மக்களுக்குப் பயன்படுகின்றது. கோடிக்கணக்கான ஆண்டுகளாகக் கையாளப்பட்டுவரும் இக் கடவுட் கலைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. மிக விரைவில், தமிழரின் கடவுட் கலைகள் உலகெங்குமுள்ள எல்லா மக்களின் கவலைகளையும், தொல்லைகளையும், துயரங்களையும்... துடைத்திடும் பொன்னாள் வந்திடும்.

அப்பொன்னுளை விரைவில் வரவழைக்க அனைவரும் குருதேவர், ஞானுச்சாரியார், இந்து வேதச் சாதகர், இந்துமதப் போதகர், பதினெண் சித்தர் மடாதிபதியுடன் தொடர்பு கொள்ளுங்கள். C/o குருமார் இரா. வெங்கடேசன் M.A. B.L., தரு குலக் காப்பாளர், 2/68, மெயின் ரோடு, வேம்படி தாளம். சேலம் மாவட்டம். 637 504.

## உலக மத ஆய்வுக்குழுவும் தமிழர்களின் கலைகளும்

உலக மத ஆய்வுக்குழு, தமிழரின் தொன்மையான கலைகளைப்பற்றித் தொடர்ந்து நிகழ்த்திய ஆராய்ச்சிகளால்; தமிழரின் எண்ணற்ற கலைகளில், சிலவற்றை வரிசைப்படுத்தியுள்ளது. இப்படித் தமிழரின் பெருமைக்கும், பேராற்றலுக்குமுரிய கலைகளைப் பட்டியலிட்டுக் காட்டியிருப்பது; இக்கலைகள், மீண்டும் வாழ்வு பெறவேண்டும் என்பதற்காகவே. ஏனென்றால், இக்கலைகள் மீண்டும் வாழ்வு பெற்றால்; அதன் மூலம், மனித சமுதாயத்துக்கே பல அரிய பயன்கள் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

1. மண்ணியல் — Geology
2. தாவரவியல் — Botony
3. விலங்கியல் — Zoology
4. மனிதவியல் — Anthropology



5. தத்துவம் — Philosophy and Theology
6. தெய்வீகக் கலைகள் — Mystical Arts
7. கோயில்களியல் — Temple Science
8. சித்த மருத்துவம் — Siddha Medicine
9. இறப்புக்குப் பின் வாழ்வு — Life Beyond Death
10. பேய் பிசாசுகள் உலகம் — The World of Spirits
11. இறந்தவர் ஆவிகளோடு தொடர்பு கொள்ளல் — Psychography
12. மனிதத்தை ஆராயல் — Ethology
13. குறிபார்த்தல் — Astrology
14. சகுனம் — Study of Omens
15. கனவு — Study of Dreams
16. வேறுலக ஆராய்ச்சி — Psychical Research
17. மருந்துகளால் நோயை நலப்படுத்தல் — Therapeutics
18. வான நூல் — Astronomy
19. பிறப்பியல் - சாதகம் — Horoscope
20. கைரேகை — Palmistry
21. எண்ணியல் — Numerology
22. அங்கவியல் - சாமுத்திரிகா லட்சணம் — Physical Structural Studies
23. வருங்காலமுரைக்க இறந்தோரின் ஆவிகளைப் பயன்படுத்தல் — Necromancy
24. மாயங்கள் விளைத்தல் — Sorcery
25. மனையியல் - மனையடி சாத்திரம் — House Planning
26. இரசவாதம் — Alchemy

..................

[விரிவஞ்சி இப்பட்டியல் இத்துடன் முடிக்கப்படுகிறது]

## தெய்வீக மருத்துவமும் ஆவி உலகும்
## MYSTICAL TREATMENT AND THE WORLD OF SPIRITS

நாட்டு நடப்பில், "பேய்க்கு", உருவம் உண்டா? இல்லையா? பேய்க்குக் கால் உண்டா? இல்லையா?; பேயின் உணவு, இனவிருத்தி, வாழுமிடம்... முதலியன எப்படிப்பட்டவை? பொதுவாகப் பேய்கள் சுடுகாட்டில்தான் வாழுகின்றனவா?; பேய்கள் மனிதரை அடிப்பதும், பிடித்தாட்டுவதும் உண்மைதானா?; பேய்களுக்கு மனிதரைப் பிடிக்காதது ஏன்?; பேய்களுக்கும் மனிதர்களுக்கும் பகை பிறந்த வரலாறு என்ன?; பேய், குறிப்பிட்ட பாழடைந்த கட்டிடங்களிலும், இடங்களிலும், மரங்களிலும்... வாழ்வதாகச் சொல்லப்படுவது உண்மைதானா?; பேய்களால், ஏதேனும் நன்மையை விளைவிக்க முடியுமா?; பேய், நம் நாட்டில் மட்டும்தான் உண்டா? அல்லது, எல்லா நாடுகளிலும் இருக்கிறதா?... என்பன போன்ற எண்ணற்ற வினாக்களுக்கு விடை காணல் இன்றியமையாததாகும்.

முதலில், மேலே, "பேய்", என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதே; அதன் பொருள்



என்ன? என்பதை ஆராயல் வேண்டும். "பேய்" என்ற சொல் பொதுவாக, மனிதக் கண்களுக்குப் புலப்படாமல் வாழுகின்ற "ஆவி"களைக் குறிக்கும். எனவே, ஆவிகளின் வகைகளை வரிசைப்படுத்தியும், பிரித்தும் பொருள் காணல் வேண்டும்.

"பேய்" என்ற சொல்லால், குறிக்கப்படும் "ஆவி"கள்; வடிவத்தால் (Physical Structure), வண்ணத்தால் (Colour), ஆற்றலால் (Power), செயலால் (by it's actions and deeds), வாழ்க்கை முறையால் (Way of life)... பல்வேறு வகைகளை உடையன. ஆனால், மிகப் பெரிய வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஆவிகளைப் பிரிப்பதே முதற்கண் செய்யப்படவேண்டியது.

### அவிட்டம் (AVITTAM)

"அவிட்டம்" என்பது இறந்துபோனவர்களின் ஆவி. இது, பச்சைக் குழந்தை போன்றது. இது, தான் வாழ்ந்து வெளிவந்திட்ட உடம்புக்குள் மீண்டும் புகவேண்டும் என்ற வெறியாலும்; தனது உடம்புடன் கூடிய வாழ்வில் ஏற்பட்ட சொந்தக்காரர்களுடன் பேசிக் கூடிப் பழகி மகிழ வேண்டுமென்ற வெறியாலும் அலைந்து திரிந்தபடியே இருக்கும்.

இவ் வெறியினை, ஒரு நிலைப்படுத்தவே; இறந்தவர் (பிணம்) தலையருகில் விளக்கு, நெல், பூ, வெற்றிலை, பாக்கு, ஊதுபத்தி, உடைத்த தேங்காய் முதலியன வைத்துப் பூசை செய்யப்படுகிறது. அதோடு இந்த அவிட்டத்தால், தீங்கு நேராமலிருக்கவே; "ஆவியர் உலகத்துக்குக் குறிப்பிட்ட வீட்டில் 'அவிட்டம்' இருக்கிறது; வந்து பண்படுத்துங்கள், அல்லது அழைத்துச் செல்லுங்கள்" என்ற செய்தி அறிவிக்கப்படுகிறது.

இவ்வறிவிப்பு, இறந்தவர் வீட்டு வாசலில்; ஒருமுழ நீளம் (1½ Feet) இடைவெளி இருக்கும்படி ஒவ்வொரு சாமத்துக்கும் (2½ Hours) ஒன்றாக மூன்று இடங்களில் வைக்கோலும்; நாலாவது இடத்தில் சாணி எருவட்டியும் (Cow dung cake) வைத்துக் கொளுத்தப்படுகின்றன.

'அவிட்டம்', பிணம் புதைக்கப்பட்ட பிறகு அல்லது எரிக்கப்பட்ட பிறகே; அது, தனது உடலுக்குள் மீண்டும் புகுவதற்காகச் செய்யும் முயற்சிகளைக் கைவிடும். அப்படிக் கைவிட்டதும்; அதற்குத் தோல்வியுணர்ச்சியும், ஏமாற்ற உணர்ச்சியும், ஏக்க உணர்ச்சியும் மிகும். அதனால்; அது வெறி கொண்டலைந்திடும்.

குழந்தைகளுக்குத் தூக்கமோ, அல்லது, வயிற்றுப் பசியோ ஏற்பட்டால்; அவை, வாய்விட்டு அழவோ அல்லது கையில் கிடைத்தனவற்றைத் தூக்கி எறியவோ, அன்றி, வேறு ஒன்றும் செய்யா!...... அதுபோல, மனித உடலை விட்டு வெளிவந்த 'அவிட்டம்'; தனது வெறியுணர்ச்சியால் வாய்விட்டழவும்; உற்றார் உறவினர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் தொல்லைப்படுத்திடும்.

இந்த 'அவிட்டம்' யார் யாரைத் தொடுகிறதோ; அவர்கள், வெப்பமான அணுத்திரளினால் தாக்குண்டவர்களாகிறார்கள். இதனால், பாதிக்கப்படுபவர்களின் முக அழகு (beauty), அமைதி(charmness), கவர்ச்சி (attraction) முதலியன சிதைவுறும். அதனால், பேயறைந்த அல்லது வெளிறிய அல்லது களையிழந்த முகம் ஏற்பட்டிடும். இப்படிப் பாதிப்புக்குள்ளானவர்கள்; ஏற்கனவே, தங்கள் வாழ்வில் இருந்த செல்வாக்கினையும், சொல்வாக்கினையும் இழந்திடுவர். அதனால், இவர்களின் வாழ்க்கையிலிருந்த வலிவும், பொலிவும், வளமும், வாய்ப்பும், வசதியும் பெருமளவில் நலிவடைந்திடும்.

அதாவது, இறந்து போனவர்களுக்கு என்னென்ன காய்கறிகளும், உணவு வகைகளும், பலகாரங்களும், பிறபொருள்களும் பிடிக்குமோ அவற்றைத்தான் இந்தக் கருமாதிச் சடங்கிலும் அமாவாசை தோறும் கொண்டாடப்படும் திதி கொடுத்தல் எனப்படும் விரதப் பூசையிலும், தலைத்திவசம் எனப்படும் முதலாம் ஆண்டு நிறைவுப்

பூசையிலும் படைக்கப்படல் வேண்டும், படைக் கப்படல் வேண்டும், படைக்கப்படல் வேண்டும். இதன்படிதான், இறந்தவர் இறைச்சியுண்பவராக இருந்தால் பூசையில் அதாவது, விரதங்களில், சடங்குகளில் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி மீன் முதலியவைகளைப் பக்குவமாகச் சமைத்தும், பச்சையாகவும் படைக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால், இறந்தவருக்காகக் கொண் டாடப்படும் கருமாதி எட்டாவது நாளில் கொண் டாடப்பட்டாலும் சரி, பத்தாவது நாளில் கொண் டாடப்பட்டாலும் சரி, பதினாறாவது நாளில் கொண் டாடப்பட்டாலும் சரி கூடுமானவரைக் கோழி அறுத்தும், ஆடு வெட்டியும், மீன்களை அறுத்தும் இவற்றின் குருதியை ஓமகுண்டத்தில் அல்லது யாக குண்டத்தில் அவிர்ப் பலியாக ஊற்றித்தான் பூசை செய்யவேண்டும். அத்துடன் இக்கருமாதிப் பூசைக்காகப் பலியிட்டவற்றின் இறைச்சியைச் சமைத்துத்தான் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று என்று ஐந்து வகைப்பட்ட எண் ணிக்கைகளில் தலை வாழை இலைகளை (முழுமை யான இலையில்) விரித்துப் படையலாகப் போட வேண்டும். இப்படிப் படையல் போடும் போது சோறு, குழம்பு, ரசம், தயிர் முதலியவற்றுடன் இறந்தவருக்கு விருப்பமான காய்கறிகள், இனிப் புப் பலகாரங்கள், காரப் பலகாரங்கள், பாயசம் முதலிய உணவு வகைகள் படைக்கப்படல் வேண்டும். இவற்றுடன், இறந்தவருக்குக் குடிப் பழக்கம் உண்டென்றால், அவருக்கு விருப்பமான மதுவகை, சுருட்டு, வெற்றிலை, பாக்கு, சுண் ணாம்பு, புகையிலை முதலியவைகளையும் படைக்க வேண்டும். அப்பொழுதுதான், இறந்தவரின் அவிட் டமும், இதற்குமுன் இறந்து போனவர்களின் அவிட்டங்களும் இக்குடும்பத்தாரை வாழ்த்திடும். இதுதான் இந்து வேதமும், இந்து மதமும் கூறு கின்ற 'முன்னோர் வழிபாடு' (The Ancestral Worship)

சிறப்புக் குறிப்பு:- "... ஆனால், இந்த 'முன் னோர் வழிபாடு' பிறமண்ணினர் என்னும் பிரு மணரான வடஆரியர்களால் வீழ்ச்சியுறச் செய் யப்பட்டுவிட்டது. அதாவது, இந்த 'முன்னோர் வழிபாட்டின்' வீழ்ச்சியே இந்து வேதத்தின் வீழ்ச்சியாயிற்று; 'முன்னோர் வழிபாட்டின் வீழ்ச் சியே இந்து வேதமதமான இந்துமதத்தின் வீழ்ச் சியாயிற்று'; 'இந்த இந்து மதத்தின் வீழ்ச்சியே இந்து மதத்தின் அருளாட்சி மொழியான தமிழ் மொழியின் வீழ்ச்சியாயிற்று'; 'இந்தத் தமிழ் மொழியின் வீழ்ச்சியே தமிழர்களின் வீழ்ச்சியாக வும், தாழ்ச்சியாகவும் ஆயிற்று'. இப்படித் தமிழர் கள் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுற்றதற்குக் காரண ணம்; இந்த நாட்டிற்கு வந்த அன்னியர்களி லேயே பிறமண்ணினர் எனும் பிருமணரான வட ஆரியர்கள் தங்களுடைய வேதமதமான சனாதன தருமத்தைத் தமிழர்களுடைய இந்து

மதத்தைப் போலவே ஹிந்து மதம் என்ற பெயரையுடைய ஒரு புதிய மதமாக அறிவித்துச் செயல்பட்டதே ஆகும். அதாவது, இந்தப் பிருமணர்கள் தமிழருக்குப் புரியாத சமசுக்கிருத மொழியில் பொய்யாக இந்து வேதம், இந்து சாத்திரம், இந்து ஆகமம், ... என்பவைகளைத் தங்கள் விருப்பம் போல் எழுதி வைத்துக் கொண்டு எந்தப் பூசையிலும், எந்தச் சடங்கிலும், எந்த விரதத்திலும், எந்த விழாவிலும், எந்தத் திருநாளிலும் பலிகொடுக்கக் கூடாது; இறைச்சியுணவு படைத்துப் பூசை செய்யக்கூடாது என்று சூழ்ச்சியான சதித் திட்டத்தை அறிவித்து விட்டார்கள். எனவேதான், கருமாதி, அமாவாசை விரதம், திதி, தலைத்திவசம் முதலிய அனைத்திலும் பலிபூசையும், இறைச்சியுணவும் தடுக்கப்பட்டு அவிட்டங்களாலும், முன்னோர்களின் அவிட்டங்களாலும் தமிழர்களின் குடும்பங்கள் சாபத்திற்கும், பாவத்திற்கும், அவிட்டத் தாக்குதல்களுக்கும் உள்ளாகி, நலிந்து, மெலிந்து பாதிப்புற்றுக் கெட்டுப் போகும்படி செய்துவிட்டார்கள், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய புதிய சமசுகிருத ஹிந்து வேதத்தின் மூலம். இப்படியேதான், இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் தங்களுடைய ஹிந்து மதச் சமசுகிருத வேதங்கள், சாத்திரங்கள், ... உபநிடதங்கள் முதலியவைகள் மூலம் தமிழர்களின் வாழ்வில் நடக்கக்கூடிய பிறந்தநாள் விழா, பெண்கள் பருவமடையும் நாள் விழா, திருமண விழா, புதுமனைப் புகுவிழா, புதிய தொழில் தொடங்கும் விழா, திருமண அறுபதாம் ஆண்டு விழா முதலிய திருவிழாக்களில் பலி கொடுத்துப் பூசை செய்வதையும், இறைச்சியுணவு சமைத்துப் படையல் போடுவதையும் தடுத்துக் கெடுத்து விட்டனர், தடுத்துக் கெடுத்து விட்டனர், தடுத்துக் கெடுத்து விட்டனர். இதன் மூலமே, இந்தப் பிறமண்ணினரான பிருமணர்கள் அருளாற்றல் மிக்க தமிழர்களின் இந்து மதத்தையும், இந்து வேதத்தையும் தமிழர்களுக்குப் பயன்படாமல் செய்து விட்டனர். அதனால்தான், தமிழர்களுடைய அகவாழ்வும், புறவாழ்வும் இருண்டவைகளாகவும், வறண்டவைகளாகவும் ஆகிவிட்டன, ஆகிவிட்டன, ஆகிவிட்டன. அது மட்டுமல்ல, தமிழர்களுக்கு என்றிருந்த இநதுமதச் சாத்திரியார்கள், தோத்திரியார்கள், ஆதகர்கள், ஈதகர்கள், ஏதகர்கள், ஓதகர்கள், கோதகர்கள், சாதகர்கள், தோதகர்கள், போதகர்கள், வாதகர்கள், ஐந்தர ஐந்திர ஐந்திறத்தார்கள் (பஞ்சாங்கத்தார்கள்), அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், குரு, குருக்கல், குருமார், பூசாறி, ஆச்சாறியார், மடாதிபதி, பீடாதிபதி, ... முதலிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட இந்து மதக் கலைஞர்களில், இந்து மதத் தலைவர்களில், இந்து மத வழிகாட்டிகளில், இந்து மத வழித் துணைவர்களில், இந்து மதப் பெரியவர்களில் யாருக்குமே தமிழர்களிடத்தில் செல்வாக்கில்லாமல் செய்து விட்

டார்கள், இந்தப் பிறமண்ணினரான பிருமணர் கள். எனவேதான், தமிழர்கள் தங்களுக்கென்று அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி யில் இருந்த இந்து வேத இலக்கியங்களையும், இந்து மத இலக்கியங்களையும் மறந்து, துறந்து, மறுத்து, வெறுத்து, எதிர்த்து, பகைத்து, நகைத்து, இழித்து ... ஏதுமற்ற அனாதைகளாக ஆகிவிட்டார் கள், ஏதுமற்ற அனாதைகளாக ஆகிவிட்டார்கள், ஏதுமற்ற அனாதைகளாக ஆகிவிட்டார்கள்.

அப்படித் தமிழர்கள் அனாதைகளாகிவிட்ட காரணத்தினால்தான் தன்னம்பிக்கை இழந்து, தன் மானம் இழந்து, இன உணர்விழந்து, மொழி உரிமையுணர்வு மறந்து, சமசுக்கிருத மொழியி லுள்ள ஹிந்து மதத்திற்கும், ஹிந்து வேதத்திற் கும் அடிமையாகி ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் இழந்து சிதைந்து சீரழிந்து கிடக் கின்றனர்'' — என்று இந்து மதத்தின் ஞானச்சாரி யாரான இந்துமதத் தந்தை, இந்து வேத நாயகம், இந்து வேத பீடம், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய தாத்தா பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித் தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள், தமது குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் எனும் நான்கிலும் அறிவிக்கின் றார், அறிவிக்கின்றார், அறிவிக்கின்றார். அதுவும், இவர், தாம் மேலேகூறிய கருத்



துக்களனைத்தும் தமக்கு முன்னால் வாழ்ந்த இந்து மதத்தின் ஞானச்சாரியாரான இந்துமதத் தந்தை, இந்து வேத நாயகம், இந்து வேத பீடம், கருூர்ப் பசுபதீசுவரர் கோயிலைக் கட்டிய தாத்தா பத்தா வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற் றங்கரைக் கருவூரார் அவர்கள் தமது குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குரு பாரம்பரியம் என்பனவற்றில் கூறியுள்ளதையே எடுத்துக் கூறு கின்றேன் நான்; என்று எழுதுகின்றார். எனவே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே தமிழர்கள் தங்களுடைய இந்து வேதத்தையும், இந்து வேத மதமான இந்து மதத்தையும் விட்டுவிலகி பிற மண்ணினரான பிருமணரின் ஹிந்து மதத்திற்கு அடிமையாகி அகவாழ்வு இருண்டும், புறவாழ்வு வறண்டும் அனாதைகளாகித் துன்புற்று அடிமை களாகி விட்டார்கள் என்ற பேருண்மை விளங்கு கின்றது. இவற்றிலிருந்து மீள வேண்டுமென்றால் ஆவி ஆன்மா ஆருயிர் மூன்றும் இணைந்து அவிட் டப் பூசைகள் அனைத்திலும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியிலுள்ள இந்து வேத நெறி முறைகளையும், இந்து மதச் சட்ட திட்டக் கட்டுப் பாட்டுப் பூசை மரபுகளையும் ஒழுகலாறு களையும், பழக்க வழக்கங்களையும் முழுமையாக ஒவ்வொரு தமிழனும் நிறைவேற்ற வேண்டும்.

பதினெண் சித்தர்கள், அவிட்டத்தினால் வரும் தொல்லைகளைத் தடுக்கவே; பிணம், வீட்

டைவிட்டு அகன்ற உடனே; அவ்வீடு முழுவதும் கழுவிவிட்டுப் பிணம் இருந்த இடத்தில் ஒரு பாத்திரம் நிறைய நீர், குத்துவிளக்கு, திருநீறு, ஊதுபத்தி முதலியன படைத்துப் பூசை செய்யும் பழக்கத்தை ஏற்படுத்தினர்கள். இப் பழக்கத்தால் 'அவிட்டம்', பிணம் இருந்த இடத்திலே சுற்றுவது, தடுக்கப்பட்டிடும்.

'அவிட்டம்', சுடுகாட்டிலிருந்து வீடு திரும்புபவர்களின் உடலோடு ஒட்டிக்கொண்டு வீட்டிற்குள் நுழையக்கூடாது என்பதற்காகவே; வீடு திரும்புகிறவர்கள், வாசலிலேயே கைகால் கழுவிக் கொள்ள வேண்டுமென்றும்; வீட்டிற்குள் நுழைந்ததும் குத்துவிளக்கைக் கும்பிட்டுத் திருநீறு பூசிக்கொள்ள வேண்டுமென்றும் சட்டதிட்டங்கள் பதினெண் சித்தர்களால் வகுக்கப்பட்டன. இவை, 'அவிட்டம்' யாருடனாவது ஒட்டியபடி வீட்டுக்குள் அலைவதைத் தடுக்கும். ஏனெனில், யாருடனாவது ஒட்டியபடியே அலையும் அவிட்டத்தைத் தடை செய்வது அரிது.

'அவிட்டம்' தான், உடலைப் பிரிந்த இடத்தில் குத்துவிளக்கு எரிவதையும், நீர் நிறைந்த பாண்டமிருப்பதையும் கண்டு அமைதியடைகிறது. அதாவது, அதற்குத் 'தன்னை மற்றவர்கள் மறக்கவில்லை', என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அந்நம்பிக்கை, வெறியுணர்ச்சியால் அலைக்கழிக்கப்பட்ட அவிட்டத்தை ஒருநிலைப்படுத்துகிறது.



அதுமட்டுமின்றி; அவிட்டம், எந்த இடத்தில் உடலை விட்டுப் பிரிந்ததோ; அந்த இடத்தில் நின்றுகொண்டுதான்; அது, பிறர் மேல் தாக்குதல் நடத்தும். ஆனால்,அவிட்டத்தினால் தண்ணீரின் மேல் நிற்கவும் முடியாது; நெருப்புச் சுடரின் அருகில் செல்லவும் முடியாது. அவிட்டம் நெருப்புக்கும், நீருக்கும் பயப்படும் பண்புடையது. எனவே, அவிட்டம், மேற்கூறிய முறைகளால் அமைதி பெறுவதோடு; செயலற்றதாகவும் ஆக்கப்படுகிறது.

திருமண விழாக்களில், "பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க" என்று வாழ்த்துவார்கள். இந்தப் பதினாறு என்கிற எண்ணிக்கை, குழந்தைகளைக் குறிப்பதாகத் தவறாகக் கருதப்படுகிறது. ஆனால், உண்மையில்; பதினாறு என்பது, 'அறிவு, அன்பு, இன்பம், இசை, உரம், ஊக்கம், ஐம்பூதம், ஒற்றுமை, கல்வி, கூழ்பொறுமை, நவலோகம், நன்மக்கள், நீண்டஆயுள், நோயின்மை, வெற்றி' ஆகிய பதினாறுவகைச் செல்வங்கள் உலகியலாகக் குறிக்கப்படுகின்றன. இந்த இடத்தில், இந்து வேதத்திற்கு நான் சுருதி, நான் ஆரணம், நான் ஆகமம், நான் மீமாம்சை என்று பதினாறு வகைச் செல்வங்களும், இந்து மதத்திற்கு நான் மறை, நான்முறை, நானெறி, நான்வேதம் என்று பதினாறு வகைச் செல்வங்களிருப்பதையும் இங்கு நினைவுபடுத்துகிறோம்.

இப் பதினாறு வகைச் செல்வங்களும், ஒரு நாளுக்கொன்றாகப் பதினாறு நாட்களில் அவிட்டத்தை விட்டு நீங்குகின்றன. இந்த அறிந்து தான் பதினெண் சித்தர்கள், பதினாறுவது நாள் (The KARUMATHI function is named as the 16th day Ceremony) கருமாதி செய்யும் ஏற்பாட்டை உருவாக்கினர். இக் கருமாதியில், அவிட்டத்துக்கு விருப்பமான அனைத்துமே படைக்கப்பட்டுப் பூசை நிகழ்த்தப்படுகின்றது.

பதினெண் சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டுச் செயலுக்கு வந்த கருமாதி செய்யும் பழக்கம்; பிற மதங்களும் இனங்களும் தமிழகத்துள் புகுந்து ஆட்சி பெற்றிட்ட காரணத்தால்; மாற்றமும், சிதைவும், குறைவும் பெற்றிட்டது. அது, நாளடைவில், தமிழ்ச் சமுதாயத்தின் பாதுகாப்பையும், வலிமையையும், வளத்தையும் பெருமளவில் பாதித்திட்டது.

அதாவது, சரியாகக் கருமாதி செய்யாவிட்டால்; ஆண்டு முடிவதற்குள் அக் குடும்பத்திலும் சுற்றத்திலும் உயிர்ச் சேதம், பொருள் சேதம், செல்வாக்குப் பாதிப்பு முதலியவை ஏற்பட்டிடும். அத்துடன், தொடர்ந்து, தோல் வியாதி (Skin Disease), மூளைப் பாதிப்பு (Mental defect or disorder) நரம்புத் தளர்ச்சி (Nervous disability),.... முதலிய நோய்கள் பரவிடும். இதைச் சித்த மருத்துவம் ஒப்புக்கொள்கிறது.



மேற்குறித்தபடி, அவிட்டத்தினால் வரக்கூடிய நோய்கள்; ஆரம்ப நிலையில் (initial or begining stage) இருந்தால்தான்; அவற்றைத் தெய்வீக மருத்துவத்தால் நலப்படுத்த முடியும். இல்லாவிட்டால், தெய்வீக மருத்துவமும், (மருந்தும்) சித்த மருத்துவமும் ஒரு சேரப் பயன்படுத்த நேரிடும்.

அதனால், அவிட்டத்தினால், மனிதர்க்குக் கெடுதல் வராமல் தடுக்கவும், வந்திடும் கெடுதல்களை உடனே நீக்கவும் தெய்வீக மருத்துவம் இன்றியமையாதது.

அதாவது, தெய்வீக மருத்துவ முறையில் தான்; 'மயில்தோகை வைத்து மந்திரித்தல்' 'தண்ணீர் மந்திரித்தல்', 'வேப்பிலைப் பாடம் போடல்', 'திருநீறு பிடித்தல்', 'முடி கயிறு தாயத்துப் போடல்', 'தகடு தரல்' ... முதலியன உண்டு. எனவே, அவிட்டத்தால் வரக்கூடிய மேற்குறிப்பிட்ட நோய்கள் (diseases and difficulties), துன்பங்கள் (sufferings), தோல்விகள் (failures),... முதலியவற்றைத் தெய்வீக மருத்துவத்தால்தான் நலப்படுத்த முடியும். எனவே, உலகம் முழுதும், தெய்வீக மருத்துவம் பரவினால் தான் உலக மக்களின் நலம் முழுமையாகக் காக்கப்படும்.

## ஆவிகள்

ஆவி:— 'அவிட்டம்', உடலைவிட்டு வெளி வந்த உடனேயே; அல்லது, ஓராண்டு காலத் துக்குள் மறுபிறப்பு எடுப்பதற்காக ஏதேனும் ஒரு கருவினுள் நுழைய முற்படும். அப்படி நுழையும் போது; 'அவிட்டம்' நுண்ணிய, மென்மையான நிலையை அடையும். இந்த நிலை, "ஆவி" நிலை எனப்படும். இந்த "ஆவி"தான், மனித உடலில் புகுந்து "உயிராக" மாறுகிறது. அதாவது, இயற் கையாகத் தோன்றிய உயிரும்; மனித உடலுக் குள்ளிருக்கும் உயிரும் ஒரே தன்மைத்தன.

உலகம் உண்டானபோது தோன்றிய உயிர் கள், பல குடும்பங்களாக (different families or categories) இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவை பேய், பிசாசு, துருசு, பூதம், கருப்பு, முனி, சென், சொக்கன், காரணமூர்த்தி, ஐயனார், மாடன், இயக்கன், குறளன், பகவன், பக்வதி, குறளி, துருசி, பிடாரி, இடாகினி, பேச்சி, சொக்கி, குறத்தி, இயக்கி, ...... என்று கணக்கிலடங்காப் பிரிவுகளைப் பெற்றுள்ளன. இவைகள் அனைத் துமே, மனித உயிராக மாறிடும் வாய்ப்புடையன. அதற்கு இவைகள், தங்கள் நிலையில் மென்மைப் பட்டு; அல்லது தங்களைத் தாங்களே நுண்மை யாகப் பக்குவப்படுத்திக் கொண்டு கருவினுள் நுழைந்திடும். அந்தத் தயாரான, மென்மைப்பட்ட பக்குவ நிலையே ஆவி நிலை. இந்த "ஆவி" மனித உடலுக்குள் போனதும் உயிராகிறது. இப்படி உண்டாகும் மனிதர்களே, இறுதிவரை மனிதப் பண்பற்று, சமுதாயப் பகையாக, எதற்கும் கட்டுப் படாத வெறிச் சத்தியாக, அழிவுச் சாதனமாக, இழிந்தன செய்வனவாக வாழ்கின்றனர்.

"ஆவி" முழுக்க முழுக்கக் கருவினுள் நுழை வதிலேயே கருத்தாக இருக்கும். சில சமயங்க ளில்; ஆவிகள், தங்களின் அவசரத்தால்; கருவி னுள் நுழையும் முறையைத் தவற விட்டுவிடும். அதாவது, மனித உடலில் மென்மையாகச் சாரா மல்; மூளை பாதிக்குமளவுக்கு இந்த ஆவிகள், அவசரப்பட்டுச் செயல்படும். அக்காலங்களில், பெரும்பாலும் புது மணமக்களே பாதிக்கப்படுவர். அப்பாதிப்பால், புதுமணத் தம்பதிகளில், மண மகனோ அல்லது மணமகளோ காரணமில்லாமல் மற்றவர்மேல் வெறுப்புக் கொள்ள நேரிடும்.

அவ்வெறுப்பு, நாளடைவில் விரிவாக வளர்ந்து; அம் மணமக்களைத் திருமண முறிவில் கூட (Divorce) கொண்டுபோய் விட்டுவிடும் அல் லது, மணமக்களில் பாதிக்கப்பட்டவர் தற்கொலை (Suicide) செய்து கொள்ளும் நிலையை உருவாக் கிடும்; அதுவன்றித் தம்பதிகள் வாழ்ந்தால், முதல்

குழந்தை, கருச்சிதைவில் முடிந்திடும். பெரும்பாலும், பல குடும்பங்களில் முதல் குழந்தை இறப்பதும், அல்லது, மந்தமாவதும் இதனால்தான்.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை, நாட்டு நடப்பில் நிறையக் காணமுடிகின்றது. திருமணமான சில நாட்களுக்குள்; மணமக்கள், காரணமில்லாமல் ஒருவரையொருவர் வெறுக்கவும்; ஒருவரையொருவர் காணுமளவிலேயே அச்சப்படவும் நேரிடல் நோயல்ல. இதை, நோயாகக் கருதினாலும்; இது மருந்தினால் நலமாகக்கூடிய நோயல்ல. இது மாதிரியான நோய்களுக்கு தெய்வீக மருத்துவத்தைத் தவிர வேறு வழியில்லை, வேறு வழியில்லை, வேறு வழியில்லை, வேறு வழியேயில்லை.

தெய்வீக மருத்துவம், மேற்குறித்தது போன்ற நோய்களுக்கு 1. மந்திரத் தாயத்துக்கள் 2. குறிப்பிட்ட உலோகங்களை உடம்பில் அணிதல் 3. குறிப்பிட்ட வண்ண (colour) உடை உடுத்துதல் 4. சித்தர்களால் அமைக்கப்பட்ட கோயில்களுக்குச் சென்று வழிபடல் 5. கடற்கரை, ஆற்றங்கரை, ஏரிக்கரைப் பகுதிகளில் சென்று வாழல் 6. அன்றாடம், குறிப்பிட்ட மந்திரச் சக்கரங்களைத் தொட்டுப் பூசை செய்தல், 7. அன்றாடம் முடி கயிறுகளை மாற்றிமாற்றி எரித்துப் பரிகாரப் பூசை செய்தல்,... என்று பலமுறைகளில் மருத்துவமளிக்கிறது.



இத்தனை வகைகளிருந்தும், தெய்வீக மருத்துவத்தால், எல்லா நோயாளிகளையும் நலமாக்க முடியவில்லை அதாவது, தெய்வீக மருத்துவம் நோய்ப் பாதிப்பு ஏற்பட்ட குறிப்பிட்ட கால அளவுக்குள் (Fixed Period) நலமாகாத நோயாளிகளை; நலப்படுத்த இயலாது என்று முடிவு கட்டுகிறது.

இது, நோய்ப் பாதிப்புகள் முற்றிவிட்டதாலோ அல்லது, தெய்வீக மருத்துவத் துறை போதிய வளர்ச்சி பெறாததாலோதான் ஏற்பட்டிருக்கிறது என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால், தெய்வீக மருத்துவம் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்ட (Invented one) ஒன்றல்ல; இது ஏற்கனவே இருந்து; வழக்கொழிந்து, மீண்டும் கண்டுபிடிக்கப்பட்ட (Discovered one) ஒன்றேயாம். எனவேதான், தெய்வீக மருத்துவத்தின் பெருமையும்; அது, மக்களுக்கு ஆற்றும் பணியும் முழுமை பெற முடியவில்லை. இம்மருத்துவத்தின் தொன்மையால்; இதற்குரிய இலக்கியச் சான்றுகள் (Literary Evidences) போதிய அளவு கிடைக்கவில்லை. அதனால், அரசும் மக்களும் ஒத்துழைத்தாலே; பல விளம்பரங்கள் செய்து; இத்துறைபற்றி அறிந்தவர்களை ஒன்று திரட்டி ஆவண செய்ய இயலும்.

## காற்று

காற்று இது, கொலை, தற்கொலை, எதிர்பாராத முடிவு...... முதலியவற்ருல் இறப்பவரின் உயிர் அடைகின்ற நிலையாகும். இது, "அவிட்டமாகவோ, ஆவியாகவோ மாறுவதுமுண்டு அப்படி மாருமல் நேரடியாகக் "காற்ருக" மாறுவதுமுண்டு.

இதற்குக் "காற்று" என்று பெயர் வைக்கப்பட்டதற்குக் காரணமே; இது, காற்றைப்போல் எங்கும் சென்று கொண்டே இருக்கக் கூடியது; சுழல் காற்றுக்குள் நின்றபடி செல்லக்கூடியது; பெரும்பாலும் காற்றடிக்கும் திசையிலேயே செல்லக் கூடியது; காற்றைப்போல் கட்டுப்படுத்த முடியாத தன்மையை உடையது என்பவையாம். இவ்வாறு, இப்பெயர் காரணப் பெயரே ஆகும்.

இக்"காற்றுக்கு"க் குறிப்பிட்ட வடிவம் கிடையாது. இது, இளைஞர்களையும், பருவப்பெண்களையும், பச்சிளங் குழந்தைகளையும் மிகுதியாகப் பாதிக்கக்கூடியது. இதன் பாதிப்பு உடம்பிலுள்ள இரத்தத்தை வீணுக்குவதும், சிறுநீரகங்களைப் பாதிப்பதுமாகும்



2. "காற்று" பாதிப்பதால் உடல்நலம் குன்றும். இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் காம உணர்ச்சி (Sexual Feeling) அதிகமாகிவிடும். அதனுல், இரத்தக் கொதிப்பேற்படலும், இரத்தம் வீணுதலும் (விந்துவாக, நாதமாக), வலிமை குன்றலும், நரம்புத் தளர்ச்சியேற்படலும், விரக்தி மனப்பான்மை உண்டாதல் (frustration), ... முதலியவை ஏற்படும்.

2. பெண்களுக்குப் புரியாத அச்சம்(Unknown fear), உடல்வலி, மாதவிடாயின்(Menses) போது பொறுக்க முடியாத வலி, ஒரே மாதத்தில் பல முறை மாதவிடாய் வரல்... ... போன்ற பல தொல்லைகள் ஏற்படுகின்றன.

பல பெண்கள், ஒவ்வொரு மாதத்தில் மாதவிடாய் வருகின்ற மூன்று நாட்களும் பொறுக்க முடியாத வலியினுல் துடியாய்த் துடித்துத் தவியாய்த் தவிக்கிருர்கள். வலி தாங்காமல், தற்கொலை செய்யும் நிலைகூட ஏற்படலுண்டு.

இப்பொறுக்க முடியாத வலியினைத் தீர்த்திட; இதுவரை, எந்த ஆராய்ச்சியும் நிகழ்த்தப்படவில்லை; புதிய மருந்துகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. பல பெண்கள் ஒவ்வொரு மாதமும் செத்துச் செத்துப் பிழைக்கிருர்கள், இப்பாதிப்புக்களால்.

**சிறப்புக் குறிப்பு:-**

இந்தக் காற்றுப் பாதிப்புக்களால் தான் பெண்களில் சிலர் பருவமடையாமல் போவதும்; சிலர் குழந்தை பெருமல் மலடாக இருப்பதும்; சிலர் குழந்தை பெற்றதும் மூளைப் பாதிப்போ, மன நிலைப் பாதிப்போ, உடல் நிலைப் பாதிப்போ பெறுவதும்; சிலர் குழந்தையை ஈன் றெடுக்கும் போதே இறந்து போவதும் நிகழுகின் றன, நிகழுகின்றன, நிகழுகின்றன. இப்படிப் பட்ட பாதிப்புக்கள் அனைத்தையும் தெய்வீக மருத்துவத்தால்தான் நலப்படுத்த முடியும். □

இத்துறையில், தெய்வீக மருத்துவமே அரிய பெரிய முறைகளைப் (Methods of Treatment) பெற் றுள்ளது. ஆனுல், இவைபற்றி ஆராய்ந்து முடி விற்கு வரப் பெரிய பெரிய நிறுவன நிர்வாக அமைப்புக்கள் எல்லா வசதிகளுடன் தேவை.

தெய்வீக மருத்துவத்தில், மணமக்களில், ஒருவர் பாதிக்கப்பட்டாலும்; இருவருக்குமே மருத் துவம் அளிக்கப்படுகிறது. இது தேவைதானு? முறைதானு? என்பதை ஆராயல் வேண்டும். அத்துடன், மேற்கூறிய நோயினுல் பாதிக்கப் பட்ட மணமக்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகளுக் கும் இந்நோயினுல் பாதிப்புண்டா? இல்லையா? என்பதையும் ஆராயல் வேண்டும். ஏனென்ருல் 'இளம்பிள்ளை வாதம்', 'உடல் வளர்ச்சியற்ற நிலை', 'மந்த நிலை' 'மூளை வளர்ச்சியற்ற நிலை', 'செவிட்டு நிலை', 'குருட்டு நிலை', 'ஊமை நிலை' ...... முதலிய நோய்கள் குழந்தைகளுக்கு வருவ தற்குப் பெற்ருேர்களே காரணமென்ற கருத்து நிலவி வருகின்றது.



மேற்குறித்த "காற்றின்" பாதிப்பால் இளை ஞர்களுக்கும், பருவப் பெண்களுக்கும் வரக்கூடிய நோய்களுக்கு தெய்வீக மருத்துவமே சிறந்தது. தெய்வீக மருத்துவத்தில் நாகச் (Snake) சக்கரம், நாற்பத்தெட்டுக் கோணச் சக்கரம், உருத்திராக்க மாலை, துளசிநீர், வில்வநீர், வெண்சங்கொலி, சாம்பிராணிப் புகை, குளக்கரையில் உள்ள கரம்பை மண், அரைத்த வெண் கடுகு, அரைத் தெடுத்த புதிய சந்தனம், திருநீறு, குங்குமம், சாந்து, மை, ...... முதலியவைகளைப் பயன்படுத் திச் செய்யப்படும் பூசைகளே தெய்வீக மருத் துவ முறைகளாகும் இம்முறைகள் உலகெங்கும் பயன்படுத்தப்பட்டால்; மனித இனத்தின் நல் வாழ்வு சிறப்பாகப் பேணப்பட்டிடும்.

"காற்றினுல்" பாதிக்கப்படும் பச்சைக் குழந் தைகளுக்கு "மாந்தம்", "கக்குவான்", "பால் கக்குதல்", "காய்ச்சல்", "எலும்புருக்கி", "கூட்டு நெஞ்சு", "ஓயாமல் அழுதல்"...... முத லிய நோய்கள் ஏற்படும். இவற்றிற்குத் தெய்வீக மருத்துவத்தில் மந்திரித்த "கருப்புப் பாசி", "வெள்ளைப் பாசி", "மான் தோல்", "தேவாங்

குத் தோல்'', ''செம்பினுல் செய்த நாய்க் காசு'', ''நாழியில் கழிப்புக் கழித்தல்'' ''அருகம்புல் கட்டுதல்'', ''புன்னைமரக் காய் கட்டுதல்''...... முதலிய பல முறைகள் கையாளப்படுகின்றன.

இதற்குத் தெய்வீக மருத்துவம் பற்றிய ஆய்வுகளும், ஆய்வுக் கூடங்களும், நூல்களும் பெருகிடல் வேண்டும்.

## அருவம்

அருவம்:- இது, ''அவிட்டம்'', ''ஆவி'', ''உயிர்'', ''காற்று'' முதலியவைகள் போலல்லாமல் எளிதில் கண்ணுக்குப் புலப்படக் கூடியது. தெளிவான உருவம் இருக்காது; ஆனுல், மனித உடலின் மேல் வெண்மையான மெல்லிய துணியைப் போர்த்தினுல் எத்தகைய வடிவம் இருக்குமோ; அத்தகைய வடிவமே இருக்கும். அதனுல்தான் உருவத் தெளிவற்ற இதனை ''அருவம்'' (உருவமற்றது) என்றனர்.

மனிதரின் கண்கள், பிறப்பிலேயே பல்வேறு அளவு ஆற்றலைப் பெற்றிருக்கின்றன என்பது விஞ்ஞானப்படி மெய்ப்பிக்கப்பட்ட உண்மை. அந்த உண்மையின் அடிப்படையில்தான்; கண்



களின் ஆற்றலின் (Power) அளவினைச் சோதித்துக் கண்ணுடி (Spectacle) போடப்படுகின்றது. இரண்டு கண்களில், ஒன்றின் ஆற்றலுக்கும் மற்ருென்றின் ஆற்றலுக்கும் கூட வேறுபாடுண்டு. இவ்வேறுபாட்டினை நுணுகி ஆராய்ந்து கண்டறிந்தே அதற்கேற்பக் கண்ணுடிகளை (Lenses) அமைப்பர்.

